பூவுலகின் நண்பர்கள் வெளியீடு | www.poovulagu.org | மே 2021 | ரூ.30

# பூவுலகு

சுற்றுச்சூழலுக்கான மாத இதழ்



இதோ.. ஒரு புதிய ஆபத்து!



## மூச்சுத் திணறும் இந்தியா!

## ஆக்சிஜன் கொடுக்க வேண்டியது அரசா? ஸ்டெர்லைட்டா?

# அரசியல் செய்யப் பழகுவோம்!

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்துவிட்டது. புதிய அமைச்சரவை பதவியேற்றுவிட்டது. “அரசியல் கட்சி சாராத மக்களாகிய நமது அரசியல் செயல்பாடு முடிந்துவிட்டது; இனி ஐந்தாண்டுகளுக்கு நமது பிழைப்பைப் பார்க்கவேண்டியதுதான்; அடுத்தத் தேர்தல் வரும்போது அரசியல் குறித்து சிந்தித்தால் போதுமானது!” என்று நினைத்தால் உங்கள் கருத்து மிகவும் தவறானது. உடனடியாக மாற்றிக் கொள்ள வேண்டும். எந்த ஒரு அரசும், அரசு அமைப்பும், அரசு நிறுவனமும் பொதுமக்களாகிய நமது வரிப்பணத்தின் மூலமே இயங்குகிறது. இந்த நாட்டில் பிறந்த அனைவருமே நேரடியாகவோ, மறைமுகமாகவோ வரி செலுத்துகிறோம். இந்த வரியின் மூலம் திரட்டப்படும் நிதியிலிருந்துதான் பட்ஜெட் போடப்படுகிறது.

நாட்டின் அத்தனை கட்டமைப்புகளும், அரசுசார்ந்த தொழில் நிறுவனங்களும் நமது வரிப்பணத்தில் இருந்தே செயல்படுத்தப்படுகின்றன. அது மட்டுமல்ல தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராடிய மக்களுக்கு எதிராக சுழன்ற தடிகளும், 18 உயிர்களைப் பறித்த துப்பாக்கிகளும், குண்டுகளும் நமது வரிப்பணத்தில் இருந்துதான் வாங்கப்பட்டது. தடிகளை சுழற்றியவர்களுக்கும், துப்பாக்கியை இயக்கி நமது சகோதர சகோதரிகளை படுகொலை செய்த “காவலர்”களுக்கு மாதஊதியம் உள்ளிட்ட பணப்பலன்கள்கூட நமது வரிப்பணத்தில் இருந்துதான் வழங்கப்படுகிறது. இந்த நிலையில் பொதுமக்களாகிய நாம் அரசியல் செய்யப் பழக வேண்டியது மிகவும் முக்கியமான செயலாகும்.

நாம் அரசியல் செய்யப்பழகுவது சாத்தியமா? எந்த அளவு சாத்தியம்?

நமது வரிப்பணத்தில் இயங்கும் அரசும், அரசு அமைப்புகளும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கூறும் விதத்தில் இயங்குகிறதா என்பதை கண்காணிப்பதே நமது அரசியல் பணியாகும். நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் அரசுக்கு வழிகாட்டும் நெறிகள் என்ற அத்தியாயத்தில் ஒரு அரசின் கொள்கைத் திட்டங்கள் எவ்வாறு வகுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. நமது இயற்கை வளங்களையும், சுற்றுச்சூழலையும் பாதுகாப்பது உட்பட பல்வேறு சமூகநீதி அம்சங்கள் இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன. இவற்றை அறிந்துகொண்டு நமது அரசுகள் அதன்படி நடந்துகொள்கின்றனவா என்று கண்காணிப்பது ஒன்றும் கடினமான அம்சம் அல்ல!

பூவுலகின் நண்பர்கள் உள்ளிட்ட பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும் அவ்வாறே செயல்படுகின்றன. நீங்களும் இந்தப் பணியில் இணைந்தால் நமது இலக்குகளை விரைவில் அடையலாம்.

வாருங்கள்! அரசியல் செய்யப் பழகுவோம்!!

# உள்ளே


**கடல்...மலை..?**
லோகேஷ் பார்த்திபன் 04

**தொய்ந்து வரும் தமிழக மின் கழகத்தின் நிதி நிலையை சமாளிக்க என்ன வழி?**
ஜென்ஸி சாமுவேல் 07

**சட்டவிரோதக் கடற்கரையோர திட்டங்களுக்கு பச்சைக்கொடி காட்டிய மத்திய அரசு!**
சதீஷ் லெட்சுமணன் 10

**புதிய அனல் மின் நிலைய மாசுக் கட்டுப்பாட்டு விதிமுறைகளும், சூழலை பாதிக்கும் தளர்வுகளும்!**
பிரபாகரன்.வீ 14

**இதோ ஒரு புதிய ஆபத்து**
பிரதீப் 18

**எளிமை - வறுமையல்ல வளமை!**
ஜீயோ டாமின் 22

**இந்திய வனச்சட்டத்தை திருத்த முயலும் அரசு, கேள்விக்குறியாகும் வனப் பாதுகாப்பு!**
மயங்க் அகர்வால் | தமிழில் : பிரதீப் இளங்கோவன் 28

**உயிர்காக்கும் பனை**
முனைவர் பா மோ செல்வகுமார் 31

**கொரோனா தடுப்பு மருந்து - காப்புரிமை என்ற மரண வணிகம்**
வழக்கறிஞர் பி.சுந்தரராஜன் 34

**உன் பாதை கவிதை**
வே.நி.சூர்யா 38

**ஆக்சிஜன் கொடுக்க வேண்டியது அரசா ? ஸ்டெர்லைட்டா? - மூச்சுத் திணறும் இந்தியா** மு.வெற்றிச்செல்வன் 45

**கிரிஜா வைத்தியநாதனுக்கு எதிராக வழக்கு தொடுத்தது ஏன்?**
பூவுலகின் நண்பர்கள் 49

**புகைப்படக் கட்டுரை** 51


## மின்மினி பக்கங்கள்


**ரகசிய வீடு** பெருமாள் முருகன் 39

**வர்ணச்சேவல்** வி.ஸூத்யேயெவ், தமிழில் : யூமா வாசுகி, 41

**தென்னமெரிக்க நாட்டுப்புறக் கதைகள்** 43




# கடலி.. மலை..?

லோகேஷ் பார்த்திபன்

நாம் நமக்கு விருப்பமானவர்களை பற்றி அதிகம் தெரிந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்களாய் இருப்போம். குறிப்பாக இளையோருக்கு அதிக ஆர்வம் இருக்கும். புதுப்புது வகையில் தங்களுக்கு பிடித்தமானவர்களைப் பற்றி தெரிந்து கொள்வர். அது, நீங்கள் தேநீர் பிரியரா அல்ல காபி பிரியரா? உங்களுக்கு நாய் பிடிக்குமா அல்ல பூனை பிடிக்குமா? பகல் மனிதரா அல்ல இரவு மனிதரா? என நீண்டுகொண்டே போகும். அக்கேள்விகளில் முக்கியமானதாக கடல் பிடிக்குமா அல்ல மலை பிடிக்குமா? எனும் கேள்வி இருக்கும். இக்கேள்விக்கு சரிசமமான பதில்கள் வந்தாலும் கடலையும், மலையும் ஒரே இடத்தில் காண ஆசை என்பர் சிலர். இந்தியாவில் கடலையும்; மலையையும் ஒரே இடத்தில் காணும் இடங்கள் குறைவு தான். இக்கட்டுரையில் நான் உங்களுக்கு கடலாய் இருந்த இடம் பின் மலையாய் மாறியதைப் பற்றி கூறவுள்ளேன்.

“எப்படி இருந்திருக்கும் இந்த பூமி” எனும் கட்டுரையில் ஒற்றை நிலப்பரப்பான பான்ஜியா(panjea) இரண்டாக பிரிந்து லவ்ரேசிய (Laurasia) மற்றும் கோண்ட்வானா (Gondwana) நிலப்பரப்பு உருவானதை பற்றியும் இந்த இரண்டு நிலப் பரப்பிற்கு இடையே ‘தெத்தியன்’ (Thethys sea) எனும் கடல் இருந்தது பற்றியும் படித்திருப்பீர்கள். அந்த தெத்தியன் எனும் இடத்தில் தான் இன்று நாம் வியந்து காணுகின்ற இமயம் எனும் பிரம்மாண்டமான மலைத்தொடர் இருக்கிறது. இமயமலையானது இப்புவியின் குறைந்து வயதுடைய் மடிப்பு மலைத்தொடர் ஆகும். 25 கோடி ஆண்டுகளுக்கு முன் வரை எவ்வித மாற்றமும் இன்றி அந்த ஒற்றை நிலப்பரப்பு பான்ஜியாவும் (panjea) ஒற்றை கடல் பரப்பும் பேந்தலசா(Panthalasa)வும் இருந்தது. பின், ஐந்து கோடி ஆண்டுகள் கழித்து அதாவது இருபது கோடி ஆண்டுகளுக்கு முன், பான்ஜியா(panjea) பிளவுபட்டு லவ்ரேசியா (Laurasia), கோண்ட்வானா (Gondwana)

உருவானது. இந்த இரண்டு நிலப்பரப்பிற்கு இடையில் இருந்த கடலே தெத்தியன் கடல் எனப்பட்டது. இந்த தெத்தியன் கடல் நீண்ட, அகலம் குறுகிய, ஆழமற்ற கடலாகும். ஆசிய தட்டில் ஓடும் நதிகள், தான் அடித்து வரும் வண்டல்களையும், மணல்களையும் தெத்தியன் கடலில் தான் கொண்டுபோய் சேர்க்கும்.

கண்டத் தட்டின் நகர்வின் காரணமாக கண்டங்கள் பிரிந்து தங்களது திசையில் பயணிக்க; ஆஸ்திரேலியா உடன் சேர்ந்து இருந்த இந்தியா எட்டு கோடி ஆண்டுகளுக்கு முன், பிரிந்து வடதிசையில் நகரத் தொடங்கியது. சுமார் மூன்று கோடி ஆண்டுகள் வரை வடதிசையில் பயணித்த இந்தியத்தட்டு சில ஆண்டுகளில் வருடத்திற்கு சுமார் 14 செ.மீ. அளவு வேகத்தில் பயணித்தது. எவ்வித இடையூறுமின்றி பயணித்த இந்தியத்தட்டு 5 கோடி ஆண்டுகளுக்கு முன், வடக்கில் இருந்த ஆசியத் தட்டில் மோத நேர்ந்தது. இங்கு பேசிக் கொண்டிருக்கும் இந்த தட்டுகளை இருவகையாகப் பிரிக்கலாம். அவை கண்டத்தட்டு மற்றும் கடல் தட்டு. கடல் தட்டின் அடர்த்தி கண்டத்தட்டை விட மிக அதிகம்.

எனவே இந்த இரு தட்டுகள் எப்போதெல்லாம் மோதிக்கொள்கிறதோ, அப்போதெல்லாம் அடர்த்தி அதிகம் இருக்கும் கடல் தட்டு புவி ஓட்டினுள் (Earth Crust) மூழ்கிவிடும்.இந்தியத்தட்டு ஆசியத்தட்டை மோதுவதற்க்குமுன், தெத்தியன் கடல்தட்டை மோதியது. அப்போது, மேற்கூறியதுபோல் இந்தியத்தட்டும், தெத்தியன் தட்டும் மோதும்போது தெத்தியன் தட்டு அடர்த்தி அதிகம் என்பதால் புவி ஓட்டினுள் மூழ்கியது. தெத்தியன் கடலில் இருந்த வண்டல்கள் எல்லாம் மூழ்காமல் ஓரமாய் ஒதுங்கி இருக்கும் அவ்வாறு ஒதுங்கி இருப்பதை “Accretionary wedge” எனக்கூறுவர். பின், இந்தியத்தட்டு அடுத்ததாக ஆசியத்தட்டுடன் மோதவிருந்தது. கண்டத்தட்டு கடல்தட்டுடன் மோதும்போது, அடர்த்தி அதிகமாக இருப்பதால் கடல்தட்டு மூழ்கிவிடும். ஆனால், இரு கண்டத்தட்டுகள் மோதும்போது ஓர் பெரும் மாற்றத்தை அவை உண்டாக்கும். காரணம் கண்டத்தட்டின் அடர்த்தியும், திடமும் சமமாய் இருப்பதே ஆகும். உங்கள் மனதினில் பல காட்சிகள் வந்துபோய் இருக்கும், அதோடு நான் சொல்லப் போவதையும் சேர்த்து காட்சிப் படுத்திக் கொள்ளுங்கள்.





கோடைக்காலத்தில் காவிரி ஆற்றின் ஒரு பக்க கரையில் நாம் அமர்ந்து இருக்கிறோம். நாம் அமர்ந்து இருக்கும் கரை இந்தியத்தட்டு ஆகும். மறுபக்க கரை ஆசியத்தட்டு ஆகும். இடையில் உள்ள வற்றிய காவிரி ஆற்றுபடுகை, வண்டல்களால் (Accretionary wedge) நிரம்பப்பெற்ற தெத்தயன் நிலப்பரப்பாகும். நாம் அமர்ந்திருக்கும் கரை எதிர்புற கரையை நோக்கி நகர... நகர... புவி ஒட்டின் அழுத்தத்தின் காரணமாக வண்டல்கள் மேலெழும்பிக் கொண்டே போகும். இவ்வாறு ஐந்து கோடி ஆண்டுகளுக்கு முன்னர் மேலெழும்பி வளர ஆரம்பித்த இமயமலை இன்னும் தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருக்கிறது.

இன்னமும் ஆண்டிற்கு சுமார் 1 செ.மீ ஆளவிற்க்கு வளர்ந்துக்கொண்டு இருக்கிறது. இமயமலையில் வண்டல்கள் இருந்தாலும் பெரும்பாலும் அங்கு கடின பாறையான கிரானைட்(Granite) அதிகம் உள்ளது. இமயமலை உலகின் மிகப்பெரிய மலைத்தொடர் மற்றும் குறைந்த வயதுடைய மடிப்பு மலைத்தொடர் ஆகும். இமயமலையில் 110க்கும் மேற்பட்ட சிகரங்கள் உள்ளன. மிகப்பெரிய சிகரமாக எவரெஸ்ட் சிகரம் உள்ளது. சுமார் 2500கி.மீ அளவிற்கு மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசையில் பரந்துள்ளது. 200 முதல் 400 கி.மீ அகலமும் மொத்தம் பரப்பளவு 5,95,000 சதுர.கி.மீ ஆகும். வடமேற்கு பகுதியல் காரகோரம் மற்றும் இந்துகுஷ் மலைகளும், திபெத்திய பீடபூமி வடக்கிலும் சிந்து—கங்கை சமவெளி தெற்கிலும் சூழப் பட்டது. இமயமலையில் சுமார் 19 நதிகள் உருவாகின்றன. அதில் சிந்து, கங்கை, பிரமபுத்திரா, யமுனா, சட்லஜ், ராவி, கோசி போன்ற முக்கிய நதிகளும் அடங்கும். இமயமலையில் இருந்து தோன்றும் நதிகள் மொத்தம் 2,60,000 சதுர கி.மீ பரப்பளவில் பாய்கின்றன. இமயமலைத்தொடரனது ஹிமாத்ரி மலைத்தொடர், ஹிமாச்சல் மலைத் தொடர், சிவாலிக் மலைத்தொடர் என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

கடல்வாழ் உயிரினங்களின் படிமங்களும், கடலில் காணப்படும் பாறைகள் இமய மலையிலும் காணப்படுவது ஆராய்ச்சி யாளர்களை இம்முடிவுக்கு வரச் செய்தது. இமயமலையின் தோற்றம் பிரம்மாண்டமும் நமக்கு வியப்பைத் தருவது போலவே இமயமலை தோன்றிய விதமும் நமக்கு வியப்பையே தருகிறது. நம் நாட்டிற்கு இயற்கை ரீதியில் வடக்கில் இருந்து வரும் குளிர்ந்த காற்றை காக்கும் அரணாகவும், பருவமழை பெய்ய காரணமாகவும், அயல்நாடுகளிடம் ஊடுருவலில் இருந்து காக்கும் அரணாகவும் உள்ளது. நாம் அனைவரும் இன்னும் வடமேற்கு நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கிறோம். இன்னும் பல கோடி ஆண்டுகள் கழித்து என்னென்ன மாறுதல் உண்டாகப் போகிறது என சிந்தித்து கொண்டே இருப்போம்.

•

# தொய்ந்து வரும் தமிழக மின் கழகத்தின் நிதி நிலையை சமாளிக்க என்ன வழி?

ஜென்ஸி சாமுவேல்



தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும்நெசவுத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப் படுவதும், வீடுகளுக்கு சலுகைக் கட்டணத்தில் வழங்கப்படுவதும் அனைவரும் அறிந்ததே.அதாவது மின்சாரத்தை உற்பத்தி செய்து, விநியோகம் செய்வதற்கு ஆகும் செலவில் ஒரு சிறிய தொகை மட்டுமே பயனாளிகளிடம் வசூலிக்கப் படுகிறது. இதனால் தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) வருமான இழப்பு. இந்த இழப்பை ஈடுகட்ட தமிழகத்தில் இரண்டு முறைகளில் மானியம் வழங்கப்படுகிறது. மின் கழகத்திற்கு (TANGEDCO) ஏற்படும் இழப்பை ஈடு செய்ய தமிழக அரசு மின் கழகத்திற்கு நேரடி மானியம் வழங்குகிறது. இரண்டாவது முறைதான் உற்பத்தி மற்றும் வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடம் அதிகக் கட்டணம் வசூலிப்பது. இது மாற்றீடு மானியம் (cross subsidy).

இந்தியாவில் அரசு நிறுவனங்களே மின்சாரம் சொந்தமாக தயாரித்து அல்லது தனியார் நிறுவனங்களிடம் வாங்கி, பயனாளிகளுக்கு விநியோகித்து வந்தன. 2003ஆம் ஆண்டு மின்சார சட்டப்படி (Electricity Act), நேரடி அணுகல் (open access) என்ற முறையில், 1 மெகாவாட்டுக்கும் அதிகமாக மின்சாரம் உபயோகிப்பவர்கள் எந்த மின் உற்பத்தியாளரிடம்மின்சாரம் வாங்கலாம் என்பதை தாங்களே தீர்மானித்துக்கொள்ளலாம் என்று அரசு அறிவித்தது.

சரி, இதற்கும் வீடுகளுக்கான சலுகை மின் கட்டணத்திற்கும் என்ன சம்பந்தம்? அதிக மின்சாரம் பயன்படுத்தி, அதிக கட்டணம் செலுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள் ஒரு குறிப்பிட்ட அளவு மின்சாரத்தை சூரிய மற்றும் காற்று போன்ற மாற்று எரிசக்தி தயாரிப்பவர்களிடம் வாங்கவேண்டும் (renewable purchase obligation) என்று அரசு நிர்ணயித்திருக்கிறது. இவர்கள் நேரடி அணுகலில் மாற்று எரிசக்தி தயாரிப்பவர்களிடம் மின்சாரம் வாங்குவதால், அரசு மின் துறைக்கு வருமானம் இன்னும் குறைந்துவிடுகிறது. தமிழக அரசின் வேண்டுகோளுக்கு இணங்கி மாநிலத்தின் நிதி நிலையையும், மேம்படுத்தும் முறைகளையும் அறிக்கையாக சமர்ப்பித்த சர்வதேச நாணய நிதியம் (International Monetray Fund) இந்தப் பிரிவினரில் 40 சதவிகித்ததினர் நேரடி அணுகல் முறைக்கு மாறிவிட்டதாகத் தெரிவிக்கிறது.

அரசுக்கு வருமானம் குறைவதால் மின் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை நிலுவையில் உள்ளது. மத்திய அரசின் ப்ராப்தி வலைத்தள (PRAAPTI <https://praapti.in/>) தரவுகளின்படி, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மின் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய நிலுவைத்தொகை அதிகமாக உள்ளது. மின் கழகம் (TANGEDCO) கொடுக்கவேண்டிய இந்தத் தொகை ரூ 18,366 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு (2020) மார்ச் இறுதி கணக்கின் படி, தமிழகத்தில் 307.54 மின் பயனாளிகள் உள்ளனர். 1957ஆம் ஆண்டு 4.3 லட்சம் பயனர் கணக்குகளே இருந்தன. அனைவருக்கும் மின்சாரம் கிடைக்கச் செய்வதில் இது அரசுக்கு வெற்றி என்றாலும், இது அதிகரிக்கும் மின் தேவையைக் காட்டுகிறது. அதிகரித்து வரும்




மின் தேவைக்கு ஏற்ப மின் கழகத்தின் மானியத் தேவையும் அதிகரிக்கிறது. நேரடி அணுகலால் வருவாயும் குறைந்து வருகிறது. இதனால் மின் கழகத்தின் நிதி நிலை சரிந்து கொண்டே செல்கிறது. இதற்கு என்னதான் தீர்வு?




மானியத்தேவை: 2007 to 2017. ரூ. கோடிகள். வீடுகளுக்கும் கோவில்களுக்கும் சலுகைக் கட்டணம்

(Source: TN Electricity Sector - Subsidy Narrative, Centre for Policy Research, RAP Energy Solutions)

மின்சாரம் தயாரித்து விநியோகம் செய்ய ஆகும் அதே செலவை பயனாளிகளிடம் வசூலிக்கலாம். வீட்டில் உபயோகிக்கும் மின்சாரத்திற்காக ஒரு அலகுக்கு சராசரியாக ரூ 2.20 செலுத்தும் நாம் ரூ 8 செலுத்த வேண்டும். மத்திய அரசு இரண்டு முறை முயற்சித்தும் அதிக எதிர்ப்பின் காரணமாக இந்த முறையை அமல்படுத்தவில்லை. மின் கழகத்திற்கும் வருவாய் கிடைப்பதோடு, பொதுமக்களுக்கும் மின் கட்டணம் அதிகரிக்காமல் இருக்க வல்லுனர்கள் சில ஆலோசனைகளை முன் வைக்கிறார்கள். புதுச்சேரியில் இயங்கும் ஆரோவில் க்ரீன் கன்ஸல்டிங் (Auroville Green Consulting) அமைப்பைச் சேர்ந்த மார்டின் ஷெர்ஃப்லெர் (Martin Scherfler) மானியங்களுக்கு மாற்றாக கூட்டு சூரிய சக்தி என்ற கருத்தை முன் வைக்கிறார்.

2016ஆம் ஆண்டு 40 சதவிகிதமாக இருந்த நேரடி அணுகல் பயன்பாடு, அடுத்த ஆண்டே 46 சதவிகிதமாக அதிகரித்ததுஎன்று தனது ஆய்வில் தெரிவிக்கிறார். இதனால் இவர்களிடமிருந்து இதுவரை கிடைத்த வருமானத்தை மின் கழகம் இழக்கிறது. வீடுகளுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை, 100 அலகுகள் (Unit)வரை உபயோகிப்பவர்கள், 101 முதல் 200, 201 முதல் 500, 500க்கும் அதிகமான அலகுகள் உபயோகிப்பவர்கள் என்று நான்கு பிரிவுகளில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த பயன்பாட்டு அளவுகளில் இருந்து மூன்றாவது, நான்காவது பிரிவினர் அதிக வருவாய் ஈட்டுபவர்கள் என்பது தெளிவாகிறது. ஆனாலும் மொத்த மானியத்தில் இவர்களே 61 சதவிகிதம் பெறுவதாக ஷெர்ஃப்லெர் அறிக்கை தெரிவிக்கிறது.

மூன்றாவது, நான்காவது பிரிவினருக்கு படிப்படியாக மானியத்தை அகற்றலாம் என்று இவர் பரிந்துரைக்கிறார். மானியத்திற்கு மாற்றாக முதல் இரண்டு பிரிவு பயனாளிகளுக்கு கூட்டு சூரிய சக்தி திட்டத்தை அமல்படுத்தலாம் என்கிறார். இதற்கு ஏறத்தாழ 13 கிகாவாட் (gigawatt) திறன் கொண்ட சூரிய மின் தகடுகள் நிறுவப்பட வேண்டும் என்றும் அதற்கு தமிழக அரசு ரூ 34,470 கோடியும், பயனாளிகள் ரூ 8,620 கோடியும் செலவு செய்ய வேண்டும் என்கிறார்.

இந்த திட்டத்தின்படிஒவ்வொரு மாதமும் செயற்பாட்டுச் செலவு (operation expenditure) செய்யும் மின் கழகம் ஒரே முறை முதலீடு (capital expenditure) செய்தால் படிப்படியாக மானியத்தை நிறுத்தி விடலாம் என்றும், மின்

கழகத்தின் நிதி நிலை சரி செய்யப்படும் என்றும் ஷெர்ஃப்லெர் கருத்துத் தெரிவிக்கிறார்.

**இது சாத்தியமா?**

தமிழகத்தில் இதற்கு நிகரான உதாரணமாக ஒரு காற்றாலை கோயம்புத்தூர் அருகே உள்ள ஓடந்துறை கிராமத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. 1996ஆம் ஆண்டு பஞ்சாயத்துத் தலைவராக தேர்தெடுக்கப்பட்ட திரு.சண்முகம் ஆழ் துளை கிணறுகள் மூலம் குடிநீர் வசதி, சாலையில் மின் விளக்குகள் போன்ற பல வசதிகளை ஏற்படுத்தினார். இதனால் ரூ 2,000 ஆக இருந்த பஞ்சாயத்து மின் கட்டணம் மூன்று ஆண்டுகளில் ரூ 50,000 ஆக அதிகரித்தது. இதற்குத் தீர்வாக 350 கிலோவாட் திறன் கொண்ட காற்றாலை ஒன்றை நிறுவ பஞ்சாயத்தில் முடிவெடுக்கப்பட்டது. காற்றாலை, அதை நிறுவத் தேவையான இடம் என்று தேவையான அனைத்துக்கும் ரூ 1.55 கோடி செலவாகும் என்று கணக்கிட்டனர். பத்து கிராமங்களை உள்ளடக்கிய ஓடந்துறை பஞ்சாயத்தில் ரூ 40 லட்சம் சேமிப்பு இருந்தது. மீதித் தொகையை வங்கிக் கடனாகப் பெற்றனர். பஞ்சாயத்தின் மின் தேவைகளுக்கு அதிகமான மின்சாரம் உற்பத்தியானதால், மின் கழகம் அதிகப்படி மின்சாரத்திற்கு பணம் வழங்கியது. இதன் மூலம் வங்கிக் கடனை பஞ்சாயத்து அடைத்தது. பத்து ஆண்டுகளில் கடனை அடைத்து முடித்து, தற்போதும் காற்றாலை இயங்கிக்கொண்டும், வருவாய் ஈட்டிக்கொண்டும் இருப்பதாக திரு.சண்முகம் தெரிவிக்கிறார்.

குஜராத் மாநிலத்தின் டுண்டி கிராமத்தில் ஒன்பது விவசாயிகள் ஒரு சூரிய சக்தி கூட்டுறவு அமைப்பை 2016ஆம் ஆண்டு ஏற்படுத்தினர். அவர்கள் தலா ரூ 5,000 பங்களிப்பு செய்தனர். சர்வதேச நீர் மேலாண்மை நிறுவனமும் (International Water Management Institute), டாடா ட்ரஸ்ட்ஸ்(Tata Trusts) நிறுவனமும் ரூ 90 லட்சம் செலவு செய்து அவர்களுக்கு சூரிய தகடுளை பொருத்திக்கொடுத்தனர். சூரிய தகடுகள் நிறுவிய சில மாதங்களிலேயே விவசாயிகள் உபரி மின்சாரத்தை குஜராத் மின் கழகத்திற்கு விற்பனை செய்யத் தொடங்கினர். இவர்கள் மற்ற விவசாயிகளுக்கும் சலுகை விலையில் மின்சாரம் வழங்குவதால், 30 ஹெக்டேர் நிலப்பரப்பு பாசனம் செய்யப்படுகிறது. ஆண்டுக்கு தலா ரூ 25,000 டீசலுக்கு செலவு செய்து பாசனம் செய்து கொண்டிருந்த இந்த ஒன்பது விவசாயிகள், மின் கழகத்திற்கும், மற்ற விவசாயிகளுக்கும் வழங்கும் மின்சாரம் மூலமாக ஆண்டுக்கு தலா ரூ 1 முதல் 1.5 லட்சம் வரை கூடுதலாக வருவாய் ஈட்டுவதாக கூட்டுறவின் உறுப்பினரான ப்ரவின் பர்மார் தெரிவிக்கிறார்.

ஓடந்துறை காற்றாலை பொது இடங்கள், பொது உபகரணங்கள் தேவைக்கு மட்டும் என்றாலும், டுண்டியின் சூரியத் தகடுகள் சில விவசாயிகளுக்கு மட்டும் என்றாலும், மக்களின் சொந்தத் தேவைக்கு ஏற்றார்போல்ஊருக்குப் பொதுவான மாற்று எரிசக்தி ஆலைகள் நிறுவி, இயக்குவது சாத்தியமே.இட வசதி மற்றும் எந்த வகை மாற்று எரிசக்தி எளிதில் கிடைக்கிறது என்பதைப் பொறுத்து சூரிய மின் உற்பத்தித் தளம் அல்லது காற்றாலை அமைத்து எரிசக்தியைப் பெறலாம். 25 ஆண்டுகளில் தமிழகத்தின் அனைத்து முதலாம், இரண்டாம் பிரிவினருக்கு கூட்டு சூரிய மின் திட்டம் அமல்படுத்தினால், அவர்கள் அந்த இரண்டு பிரிவினரின் தேவைக்குப் பின் உள்ள உபரி மின்சாரத்தை மின் கழகத்திற்கு விற்பனை செய்யலாம். மின் கழகத்திற்கு தற்போது ஒரு அலகுக்கு ஆகும் செலவை விட இது மிகவும் குறைவாக இருக்கும். இதனால் மின் கழகத்திற்கு ரூ 229,970 கோடி லாபம் என்றும் மானியச் செலவைத் தவிர்ப்பதால் தமிழக அரசுக்கு ரூ 23,068 கோடி லாபம் என்றும் ஷெர்ஃப்லெர் கருத்துத் தெரிவிக்கிறார். உபரி மின்சார அளவைப் பொறுத்து வீட்டு பயனாளிகளுக்கும் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது.

அவரது கருத்துக்களை அமல்படுத்துவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்தாலும் வெற்றிகரமாக செயல்படும் ஓடந்துறை, டுண்டி போன்ற ஆலைகளை, சாத்தியப்படும் இடங்களில் அதிகமாக நிறுவினால் அது அனைத்துத் தரப்பினருக்கும் ஆதாயமாகவே இருக்கும். இதனால் 2022ஆம் ஆண்டுக்குள் 175 கிகாவாட் மாற்று எரிசக்தித் திறனை நிறுவ வேண்டும் என்ற மத்திய அரசின் குறிக்கோளையும் அடைய முடியும்.

**(புகைப்படம்: திரு. ஷண்முகம்)**

**(இந்தக் கட்டுரை Earth Journalism Network அமைப்பின் Renewable Energy Media Fellowship என்ற மாற்று எரிசக்திக்கான ஊடக மானிய உதவியுடன் எழுதப்பட்டது)**

●

# சட்டவிரோதக் கடற்கரையோர திட்டங்களுக்கு பச்சைக்கொடி காட்டிய மத்திய அரசு!

**சதீஷ் லெட்சுமணன்**




உரிய கடற்கரை ஒழுங்காற்று மண்டல அனுமதியின்றி தொடங்கப்படும் திட்டங்களை இழப்பீடு மட்டும் செலுத்தி விட்டு தொடரலாம் என மத்திய சுற்றுச்சூழல் துறை உத்தரவிட்டுள்ளது.

கடல் மற்றும் கடற்கரை பகுதிகளில் திட்டங்களை செயல்படுத்துவதற்கு Coastal Regulatory Zone Notification *2011*ன் கீழ் உரிய முன் அனுமதி பெறுவது அவசியமாகும். இதன் மூலம் கடற்கரையை ஒட்டிய மணல்மேடுகள், நதிகள், முகத்துவாரங்கள், கழிமுகங்கள், ஊற்றுகள், அலையாத்திக் காடுகள் போன்றவற்றின் பல்லுயிர்த்தன்மை பாதுகாக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக இந்தியாவில் உள்ள சட்டங்களில் அதிகமுறை விதிமீறப்




பட்ட சட்டம் CRZ 2011ஆகத்தான் இருக்கும். பொதுமக்கள் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போன்றவர்களின் கண்காணிப்புக்கு அப்பாற்பட்ட பல கடற்கரை இடங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் CRZ விதிகளை மீறியே செயல்படுத்தப்படுகிறது. CRZ Notification 2011 —ன் கீழ் கடற்கரை பகுதிகளில் தொடரப்படும் திட்டங்களுக்கு தொடங்குவதற்கு முன்னரே CRZ அனுமதி பெறுவது அவசியமாகும். திட்டம் தொடங்கிய பின்னர் CRZ அனுமதி கோர முடியாது.

இந்தியாவில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் CRZ அனுமதி இல்லாமல் தொடரப்பட்டு தற்போது CRZ அனுமதிபெற முடியாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. தற்போது உரிய அனுமதி பெறாமல் மேற்கொள்ளப்படும் திட்டங்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பிற்கான இழப்பீட்டைச் செலுத்தி விட்டு திட்டத்திற்கான CRZ அனுமதியை பெற்றுக் கொள்ளலாம் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 19ஆம் தேதி மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் வெளியிட்டுள்ள உத்தரவில் கடற்கரை பகுதிகளில் CRZ அனுமதி பெற்று தொடர வேண்டிய திட்டங்களை உரிய CRZ அனுமதி பெறாமலே தொடங்கி விட்டால் திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனம் CRZ Notification பிரிவு 4.2ன் கீழ் தேவையான ஆவணங்கள், கடல்சார் சுற்றுசூழல் தாக்க மதிபீட்டு அறிக்கை அல்லது/மற்றும் நிலம்சார் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தடையில்லாச் சான்று ஆகியவற்றை தயாரித்து மாநில கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையத்திடம் விண்ணப்பித்தால் அந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

CRZ அனுமதி பெறாமல் தொடங்கப்பட்ட மற்றும் செயல்படத் தொடங்கிய திட்டங்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை மாநில கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையம் ஆய்வு செய்து அதற்கு இழப்பீடாக 3 ஆண்டுகளுக்குள் Compensatory Conservation Plan மற்றும் Community Resource Augmentation Plan—ன் கீழ் செய்து முடிக்க வேண்டிய குறிப்பிட்ட பரிந்துரைகளை வழங்கும் எனவும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை எடுத்ததற்கான காரணம் குறித்து அந்த உத்தரவில் ஒரு வழக்கின் தீர்ப்பு மேற்கோளாகக் கூறப்பட்டிருந்தது. உச்சநீதிமன்றத்தில் சிவில் வழக்கு எண். 1526/2016 Alembic Pharmaceuticals Ltd. Vs Rohit Orajapati & Ors. என்ற வழக்கின் இறுதித் தீர்ப்பில் சுற்றுச்சூழல் விதிமுறைகளை மீறிய காரணத்திற்காக தொழிற்சாலையை மூடுவது

தேவையற்றது எனக் கூறப்பட்டிருந்தது. உத்தரவில் கூறப்பட்ட குறிப்பான வரிகள் இவை "The closure of the industries are not warranted, however, order for payment of compensation as a facet of preserving the environment". இதைக் காரணம் காட்டிய மத்திய அரசு இதே தீர்ப்பில் கூறப்பட்டிருந்த மற்றொரு முக்கியமான கருத்தை மறைத்து விட்டது. அத்தீர்ப்பில் ஒரு திட்டத்தை விதிகளை மீறி கட்டிவிட்டு அதன் பின்னர் அனுமதி வாங்கும் நடைமுறையானது இயற்கையை சீரழித்துவிடும். மேலும் சரிசெய்ய முடியாத அளவிற்கு இயற்கையை பாழாக்கி விடும் எனக் கூறப்பட்டிருந்தது. ("the grant of an ex post facto environmental clearance would be detrimental to the environment and could lead to irreparable degradation of the environment. The concept of an ex post facto or a retrospective EC is completely alien to environmental jurisprudence" )

இந்த புதிய உத்தரவின் மூலம் தமிழ்நாட்டில் CRZ அனுமதி பெறாமல் தொடங்கப்பட்டு பின்னர் எதிர்ப்புகள் மற்றும் வழக்குகளின் காரணமாக கிடப்பில் உள்ள திட்டங்கள் மீண்டும் அனுமதி பெற்று திட்டத்தை தொடரும் முனைப்பில் உள்ளன.

**1. சென்னை கிழக்குக் கடற்கரை சாலை மழைநீர் வடிகால் திட்டம்.**

கொட்டிவாக்கம் முதல் உத்தண்டி வரையிலான கிழக்கு கடற்கரை சாலை பகுதிகளில் ஜெர்மன் நாட்டு வங்கி நிதி உதவியுடன் சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் அமைக்கும் பணியை கடந்த ஆண்டு ஜூன் மாதம் தொடங்கியிருந்தது. இயற்கையாகவே மழைநீர் வடியும் இடங்களில் வடிகால் அவசியமில்லை எனவும் கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையம் இத்திட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை என்று கூறியும் திட்டத்திற்கு தடை விதிக்கக் கோரி குடியிருப்பு வாசிகள் தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்திருந்தனர். இதுகுறித்து ஆய்வு செய்ய பசுமைத் தீர்ப்பாயத்தால் அமைக்கப்பட்ட குழுக் கட்டுமானத்தைத் தொடங்கிய பிறகு அனுமதி அளிக்கும் (Post facto) அம்சங்கள் CRZ Notification 2011ல் இல்லை எனவும் கடற்கரை ஒழுங்காற்று மண்டல அனுமதி பெறாமல் திட்டத்தை துவக்கியது தவறுதான் எனவும் அறிக்கை சமர்ப்பித்தது. ஆனால், அண்மையில் தி நியூ இந்திய எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு சென்னை மாநகராட்சி மூத்த அதிகாரி ஒருவர் அளித்த பேட்டியில் புதிய விதிகளின் கீழ் இத்திட்டத்திற்கு அனுமதி வாங்குவோம் எனத் தெரிவித்துள்ளார்.

**2. பரக்காணி தடுப்பணை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தாமிரபரணி ( குழித்துறை) ஆறு கடலில் கலக்கும் தேங்காப் பட்டினம் முகத்துவாரத்திற்கு அருகாமையில் தடுப்பணை ஒன்றை தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறையானது 2018 ஆம் ஆண்டு அமைக்கத் தொடங்கியது. முகத் துவாரத்திலிருந்து ஆற்றுக்குள் கடல் நீர் புகுவதை தடுக்க இந்தத் தடுப்பணையைக் கட்டுவதாக அரசு தெரிவித்தது. ஆற்றில் நீர் வரத்து குறைந்த காரணத்தால் முகத்துவாரத்தில் மண் அதிகமாகி மீன்பிடிக்கச் செல்லும் படகுகள் கவிழ்ந்து விடுவதாகவும், மேலும் CRZ மண்டலத்திற்குள் வரும் இத்திட்டத்திறகு உரிய முன் அனுமதி பெறவில்லை என்றும் கூறி மீனவ சங்கம் ஒன்று பசுமைத் தீர்ப்பாயத்தில் தொடுத்த வழக்கில் விசாரணைக்காக நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த குழுவானது நேரில் ஆய்வு செய்து அளித்த அறிக்கையில் தடுப்பணையானது CRZ மண்டலத்திற்குள்தான் வருகிறது என்றும் உரிய அனுமதி பெறாமல் திட்டத்தை தொடங்கியதால் ஆற்றில் நீரோட்டம் பாதிப்படைந்துள்ளது என்றும் கூறப்பட்டிருந்தது. இதுகுறித்து திருநெல்வேலி மண்டல பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது " தடுப்பணையானது CRZ மண்டலத்திற்குள் வரவில்லை என்றும் ஒருவேளை அப்படி தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கினால் புதிய உத்தரவின் கீழ் பின் அனுமதி வாங்கவோ அல்லது மேல்முறையீடு செய்யவோ இருக்கும் வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்துவோம் என்று தெரிவித்தார்.

**3. கே.டி.வி. தனியார் எண்ணெய் சேமிப்புக் கிடங்கு**

சென்னை தண்டையார்பேட்டையில் செயல்பட்டுவந்தகேடிவிநிறுவனம்தன்னுடைய எண்ணெய் சேமிப்பு கொள்கலன்களை CRZ Notification 2011ன் படி 'Notified Port Area' எல்லைக்குள் அமைக்காமல் வெளியே அமைத்ததோடு அல்லாமல் திட்டத்தை தொடங்கிவிட்டு பின் அனுமதி நடைமுறையில் CRZ அனுமதியை



பெற்றிருந்தது. இதற்கு எதிராக தொடப்பட்ட வழக்கில் திட்டத்திற்கு வழங்கப்பட்ட CRZ அனுமதியை பசுமைத் தீர்ப்பாயம் ரத்து செய்திருந்தது. இந்த உத்தரவிற்கான தடையை உச்ச நீதிமன்றத்தில் அந்த நிறுவனம் பெற்று விட்டாலும் விரைவில் இந்த திட்டத்தை புதிய உத்தரவின் கீழ் வரன்முறைப்படுத்த அதிக வாய்ப்புள்ளது.

**4. ராடிசன் ப்ளூ கடற்கரை சொகுசு விடுதி**

ஏப்ரல் மாதம் மாமல்லபுரம் கடற்கரையில் CRZ அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட 'ராடிசன் ப்ளூ' சொகுசு விடுதிக்கு எதிரான வழக்கு ஒன்றில் தீர்ப்பளித்த பசுமைத் தீர்ப்பாயம் கடலில் இருந்து 0 – 200மீட்டருக்குள் கட்டப் பட்டிருக்கும் கட்டுமானங்களை இடிக்கவும், சுற்றுச்சூழல் பாதிப்பிற்கு இழப்பீடாக 10 கோடி அபராததையும் விதித்திருந்தது. ஆனால், புதிய விதிகளை சுட்டிக்காட்டி 200 – 500 மீட்டர் இடைப்பட்ட பகுதியில் உள்ள கட்டுமானங்களை வரன்முறைப்படுத்த அனுமதியினை தீர்ப்பாயம் அளித்தது.

இப்படி பல்வேறு சட்டவிரோதத் திட்டங்கள் தொடர்வதற்கு இந்த புதிய உத்தரவு வழிவகை செய்துள்ளது. சட்டவிரோதத் திட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் வரன்முறைப்படுத்தலாம் என்று குறைந்தபட்ச கால அளவு கூட நிர்ணயிக்கப்படாததால் இந்த புதிய உத்தரவு கடற்கரையில் யார் வேண்டுமானாலும் திட்டங்களை கொண்டு வந்துவிட்டு பின்னர் இழப்பீட்டைச் செலுத்தி திட்டத்தை தொடர்வதற்கான ஒரு சுதந்திரத்தையும் அளித்துள்ளது. இந்த உத்தரவைப் பார்த்து அதிர்ச்சியும் கவலையுமுற்ற மத்திய அரசின் முன்னாள் எரிசக்தித் துறை செயலாளர் EAS சர்மா மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் (<https://countercurrents.org/2021/03/post-facto-crz-clearance-environmental-justice-goes-for-a-toss/>) அதில் "இந்த புதிய உத்தரவானது தொடர்ந்து மேலும் விதிமீறல்களுக்கும் சுற்றுச்சூழல் பாதிப்பிற்குமே வழிவகுக்கும். அண்மையில் வெளியான பல்வேறு ஆய்வுகளும் கடற்கரையோரம் உள்ள அலையாத்திகள், மண் மேடுகள் உள்ளிட்ட கடலோர வளங்களை நாம் இழந்துள்ளோம். இந்த உத்தரவானது சுற்றுச்சூழல் பேரழிவை உண்டாக்குவதற்கு முன்பாக இதனைக் கைவிடுங்கள்" என்று கூறப்பட்டிருந்தது.

இந்திய மற்றும் தமிழக கடற்கரையானது ஏற்கெனவே இதுபோன்ற சுற்றுச்சூழல் விதிமீறல்களாலும், இயற்கைப் பேரிடர்களாலும், கடல் அரிப்பாலும், கடல் நீர் உட்புகுவதாலும் பேராபத்தை சந்தித்து வருகின்ற நிலையில் விதிமீறல் திட்டங்களையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளை மீறுபவர்களையும் தொடர்ந்து ஊக்குவிக்க ஏற்கனவே இருக்கின்ற சட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கைகளை மத்திய பா.ஜ.க. அரசு திட்டமிட்டு செயலாற்றி வருவது கண்டனத்திற்குரியது. கடலையும், கடற்கரையையும் பாதுகாப்பதன் மூலமே மீனவர்களின் வாழ்வாதரத்தையும் கடல்சார் பல்லுயிரியத்தையும் பாதுகாக்க முடியும் என்பதை அறிந்தும் இப்படியான சூழல் விரோத முடிவுகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்வது கவலையளிக்கிறது. ●

பிரபாகரன் வீ



# புதிய அனல் மின் நிலைய மாசு கட்டுபாட்டு விதிமுறைகளும், சூழலை பாதிக்கும் தளர்வுகளும்!

இந்தியாவில் பயன்படுத்தப்படும் பெரும்பான்மை மின்சாரம் அனல் மின் நிலையங்களில் இருந்தே உற்பத்தியாகுகிறது. மொத்த உற்பத்தியில் சரியாக 63% அனல் மின் நிலையங்களின் இருந்தே நமக்கு கிடைத்து வருகிறது என்றாலும், அவை வெளியிடும் மாசு சுற்றுச்சூழலுக்கும், மனித வாழ்விற்கும் கேடு விளைவிப்பதாகவே உள்ளது. காலநிலை மாற்றத்திற்கு காரணமான Green house gases என்றழைக்கப்படும் பசுமை இல்ல வாயுவை வெளியிடுவதில் எரிசக்தி துறையின் பங்கு மிக முக்கியமானது. தமிழ்நாட்டில் எரிசக்தியினால் வெளியேறும் பசுமை இல்ல வாயுவில் 60%க்கும் மேல் அனல்மின்சார நிலையங்களில் இருந்தே வெளியேறுகிறது.

அனல் மின் நிலையங்களில் இருந்து வெளியேறும் SOx, NOx, CO, Ozone உள்ளிட்ட நச்சு வாயுக்கள், சாம்பல் கழிவுகள் மற்றும் அதனால் பரவும் நுண்துகள்கள் அப்பகுதியின் இயற்கை சூழலையும், அப்பகுதியில் உள்ள மக்களின் உடல் நலத்தையும் பெரிதும் பாதிக்கிறது. இது மட்டுமல்லாது Mercury, Lead, Antimony, Arsenic, Beryllium, Cadmium, Nickel, Selenium, Manganese, radium, Uranium முதலிய கனிமங்களும் தீவிர உடல் உபாதைகளை ஏற்படுத்துவதாக உள்ளன. ஒரு சராசரி 500MW அனல் மின் நிலையத்தில் இருந்து மட்டும் நாள் ஒன்றுக்கு 105டன் SO2, 24டன் NO2, 2.5டன் PM2.5 நுண்துகள்கள், 3500 கிலோ சாம்பல் ஆகிய காற்று மாசுகள் காற்றில் வெளியேறுகிறது. இந்தியா முழுவதிலும் 2,33,171MW திறன் கொண்ட அனல் மின் நிலையங்கள் உள்ளன. குறிப்பாக தமிழ்நாட்டில் மட்டும் 14,512 MW அளவிலான அனல் மின் நிலையங்கள் உள்ளன. அப்படியன்றால் எவ்வளவு சுற்றுச்சூழல் மாசுபாட்டினை இவை விளைவிக்கும் என்று சிந்தித்து பாருங்கள்.

இவ்வாறு தீவிர சூழலியல் சீர்கேட்டிற்கு காரணமாக இருக்கும் அனல்மின் நிலையத்தின் மாசுபாட்டினை குறைக்க எந்த தர கட்டுப்பாடும் 2015க்கு முன்பாக பெரியளவில் இந்தியாவில் இல்லை. (PM நுண் துகளுக்கு மட்டும் இருந்தது.) கடந்த 07.12.2015 அன்று, மத்திய சுற்றுசூழல் அமைச்சகம் சார்பில் அனல்மின் நிலையங்களின் மாசு பாட்டை கட்டுப்படுத்துவதற்கான தர அளவு கோலுக்கான அறிவிப்பு வெளியானது. இதில் நுண்துகள்கள், சல்பர் ஆக்சைட்கள்,

நைட்ரஜன் ஆக்சைட்கள், பாதரசம் ஆகியவற்றை அனல்மின் நிலையங்கள் வெளியேற்றுவதற்கான அளவுகோலினையும், நீர் பயன்பாட்டிற்கான அளவுகோலும் நிர்ணயம் செய்யப்பட்டிருருந்தது. மேலும் மிக முக்கியமாக SO2 சல்பர் டை ஆக்சைட்களை குறைப்பதற்காக FGD(Flue Gas Desulphurization) தொழில்நுட்பமும் கட்டாயமாக்கப்பட்டது. இதன்படி 31 டிசம்பர் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் துவங்கப்பட்ட 500 MWக்கு குறைவான அனல் மின் நிலையங்கள் சல்பர் வெளி யேற்றத்தை 600 mg/Nm3 ஆக குறைக்க வேண்டு மெனவும், 500 MWக்கு மேற்பட்ட அனல் மின் நிலையங்கள் சல்பர் வெளியேற்றத்தை 200 mg/Nm3 ஆக குறைக்க வேண்டுமெனவும் நிர்ணயித் திருந்தது. இதே போன்று 01 ஜனவரி 2017க்கு பிறகு துவங்கப்பட்ட அனைத்து அனல் மின் நிலையங்களும் சல்பர் வெளியேற்றத்தை 100 mg/Nm3 அளவிற்கு குறைக்க வேண்டும் என்றும் அனல் மின் நிலையங்களின் கால கட்டத்தையும் அளவுகோலையும் வைத்து மூன்றாக பிரிக்கப்பட்டு சல்பரின் தரம் நிர்ணயம் செய்யப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்த அனல்மின் நிலையங்களுக்கு முதலில் 2017 டிசம்பர் வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்த நிலையில், 2017ம் ஆண்டில், இது மேலும் 2022 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டது. இந்த விதிமுறை 2015 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது முதல் தற்போது வரை நாடு முழுவதிலும் உள்ள 448 நிலையங்களில் வெறும் 6 அனல்மின் நிலையங்களில் மட்டுமே FGD தொழிற்நுட்பம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 155 அனல் மின் நிலையங்களில் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், மீதமுள்ள நிலையங்களில் FGD நடைமுறை படுத்துவதற்கான பணிகள் இன்னும் முழுவீச்சில் துவங்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இந்த வேளையில், இதை மேலும் தாமதப்படுத்தும் விதமாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் Environmental (Protection) Amendment rules, 2021 என்ற பெயரில் புதிய திருத்தத்தை கடந்த மார்ச் 31 அன்று வெளியிட்டுள்ளது. இந்த புதிய திருத்தத்தின் படி, அனல் மின் நிலையங்கள் A,B,C என்று மூன்று பிரிவுகளாக தரம் பிரிக்கப்பட்டு அதற்கான காற்று மாசு குறைக்கும் கருவிகள் பொருத்துவதற்கான கால அவகாசமும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன்படி, டெல்லி NCR பகுதியில் இருந்து 10கிமீ சுற்றளவில் வரும் அனல் மின் நிலையங்களும், 10 லட்சம் மக்கள் தொகை உள்ள நகரங்களில் உள்ள அனல் மின் நிலையங்களும் A பிரிவின் கீழ் வருகிறது. A பிரிவில் உள்ள அனல் மின் நிலையங்கள் 2022 டிசம்பர் மாதத்திற்குள் காற்று & நீர் மாசுபாட்டினைக் குறைக்கும் விதிமுறைகளை செயல்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதே போன்று, மாசடைந்த பகுதிகள்/ நகரங்களில் இருந்து 10KM சுற்றளவில் உள்ள அனல் மின் நிலையங்கள் B பிரிவு எனவும், B பிரிவில் உள்ள அனல் மின் நிலையங்கள் மாசுபாட்டினை விதிமுறைக்கு உட்பட்டு கட்டுபடுத்துவதற்கு வரும் 31 டிசம்பர்2023 வரை கால அவகாசம் நீட்டிக்கபட்டுள்ளது.

இவை இரண்டும் இல்லாத பகுதிகளில் உள்ள அனல் மின் நிலையங்கள் C பிரிவு எனவும், C பிரிவு அனல் மின் நிலையங்கள் மாசுபாட்டினை விதிமுறைக்கு உட்பட்டு குறைக்க 31 டிசம்பர் 2024 வரையும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள அனல் மின் நிலையங்களை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 50—60% அனல் மின் நிலையங்கள் (90 முதல் 130 GW) C பிரிவின் கீழ் வருகின்றன, B மற்றும் C பிரிவில் உள்ள பழைய மூடப்படும் நிலையில் உள்ள(RETIRING PLANTS) அனல் மின் நிலையங்களுக்கு அதன் மாசுபாட்டினை விதிமுறைக்கு உட்பட்டு கட்டுப்படுத்த 31 டிசம்பர் 2025 வரைகால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த கால நீட்டிப்பால் 60% அனல் மின் நிலையங்கள் மேலும் 2—3 ஆண்டுகளுக்கு சூழல்மாசுபாடு ஏற்படுத்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாகவே தெரிகிறது.

இதற்குமுன் இருந்த Environment (protection) Amendment Rules, 2015 விதிகளின் படி தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்கள் அனைத்தும் டிசம்பர் 2022க்குள் புதிய மாசு கட்டுப்பாடு விதிமுறைகளை பின்பற்றியாக வேண்டிய நிலையில் இருந்தது. ஆனால், தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தத்தின் காரணமாக நெய்வேலி, பரங்கிப்பேட்டை, தூத்துக்குடி மற்றும் மேட்டூரில் உள்ள அனல் மின் நிலையங்கள்



இன்னும் 3 ஆண்டுகளுக்கு கட்டுப்பாடில்லாமல் மாசினை ஏற்படுத்தும்.

குறிப்பாக நெய்வேலியில் உள்ள அனல் மின் நிலையத்தின் பெரும்பான்மையான நிலையங்கள் காலாவதியானதாகவே இருக்கின்றன. NLTPS Phase-I நிலையம் 1962 முதல் 1970 ஆம் ஆண்டுக்கு இடையிலான காலகட்டத்தில் உருவாக்கப்பட்டது, இதே போன்று, NLTPS Phase II நிலையங்கள் 1988 முதல் 1993 ஆம் ஆண்டுக்கு இடையிலான காலக்கட்டத்தில் உருவாக்கப்பட்டவை. நெய்வேலியில் இயங்கி கொண்டிருக்கும் பெரும்பான்மை அனல் மின் நிலையங்கள் 25 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது. இந்நிலையில், 2011—2015 க்குள் மூடப்பட்டிருக்க வேண்டிய இது போன்ற அனல் மின் நிலையங்கள் இன்னும் செயல்பட்டு கொண்டிருப்பதோடு, புதிய நிலையங்களை காட்டிலும் இத்தகைய பழைய அனல் மின் நிலையங்களே, சூழலியல் பாதிப்பை அதிகம் ஏற்படுத்துவதாகவும் உள்ளன. இத்தகைய பழைய மூடப்பட வேண்டிய அனல் மின்

நிலையங்களுக்கு 2025 வரை கால அவகாசத்தை நீட்டித்திருப்பது என்பது இந்த விதிமுறைகள் கொண்டுவரப்பட்டுள்ள நோக்கத்திற்கே முற்றிலும் எதிராக உள்ளது.

இந்த புதிய திருத்தத்தின் படி, மாசுக் கட்டுப்பாடு செய்யாத அனல் மின் நிலையங்களுக்கு அபராதம் விதிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் விதிக்கப்படும் அபராத தொகையானது FGD தொழிற்நுட்பம் நடைமுறைப்படுத்தத் தேவையான நிதியைவிடப் பல மடங்கு குறைந்தாகவே இருக்கிறது .

A பிரிவுக்கு ஒரு யூனிட்க்கு 20பைசா அபராதமும், Bபிரிவுக்கு ஒரு யூனிட்க்கு 15 பைசா அபராதமும், சிபிரிவுக்கு ஒரு யூனிட்க்கு 10 பைசா அபராதமும் விதிக்கப்படும் என புதிய திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியென்றால் 60% உற்பத்தி திறனுடன் இயங்கும் 500 MWC பிரிவு அனல் மின் நிலையம் ஆண்டுக்கு 26 கோடி மட்டுமே அபராதமாக கட்ட நேரிடும். இதுவே ஒரு 30% உற்பத்தி திறனுடன் இயங்கக் கூடிய மூடும் நிலையில் உள்ள பழைய C பிரிவு 250MW அனல் மின் நிலையம் ஆண்டுக்கு 13கோடி அபராதம் கட்ட வேண்டியது வரும். ஆனால், இவற்றில்FGD தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் 150கோடிரூபாய் செலவு செய்ய வேண்டியது வரும். அடுத்த 5—10 ஆண்டுகளில் மூடப்போகும் அனல் மின் நிலையத்திற்கு FGDயில் 150 கோடி செலவு செய்வதை விட அதை விட குறைவான அபராதம் கட்டிவிட்டு அடுத்த 5—10 ஆண்டுகளுக்கு மின்சாரம் தயாரிப்பதாக சொல்லி தொடந்து சூழலை மாசு படுத்தக்கூடும்.

உதாரணத்திற்கு நெய்வேலி அனல் மின் நிலையத்தை எடுத்துக்கொள்ளுங்கள், நெய்வேலி C பிரிவில் வருவதாலும், அங்குள்ள அனைத்து அனல் மின் நிலையங்களும் மூடப்படும் தருவாயில் உள்ள 25வருடம் மேலான பழைய நிலையம் என்பதாலும், புதிய விதிகளின் படி இவற்றிற்கு 2025 டிசம்பர் வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில்,2026ஆம் ஆண்டிற்கு பிறகு அந்த நிலையங்கள் இன்னும் ஒரு 5 வருடம் இயங்குவதாக எடுத்துக்கொண்டாலும். வெறும் 5 வருடத்திற்கான அபராதத்தை (ஆண்டுக்கு கட்டி விட்டு அடுத்த 10 ஆண்டுகளுக்கு அது சூழலியல் பாதிப்புகளை ஏற்படுத்தும். நெய்வேலி 2 இல் உள்ள 7 அனல் மின் நிலையங்களும் 210MW திறன் கொண்ட பழைய அலகுகள். ஒரு 210MW நிலையத்திற்கு FGD தொழில்நுட்பத்தை பொருத்த சுமார் 150 கோடி செலவாகும். ஆனால், 2026—30 வரை 5 ஆண்டுகளுக்கு அபராதம் கட்ட 50கோடி தான் செலாவாகும் (ஆண்டுக்கு சுமார் 10கோடி). இந்த சூழலில் அனல் மின் நிலைய நிர்வாகம் நிச்சயம் அபராதம் கட்டிவிட்டு சுற்றுசூழலை தொடர்ந்து மாசுபடுத்தவே முயலும்.இது நிச்சயம் ஒரு நல்ல திட்டம் இல்லை.

தமிழகத்தில் இயங்கி வரும் மேட்டூர், தூத்துக்குடி, நெய்வேலி, பரங்கிப்பேட்டை என பெரும்பான்மையான அனல் மின் நிலையங்கள் C பிரிவில் தான் வருகின்றன. இவை அதன் மாசுபாட்டினைக் கட்டுபடுத்த இன்னும் 3—4 ஆண்டுகள் எடுத்துக்கொள்ளக் கூடும் . அதன் பின்னரும் நடைமுறைப்படுத்துவார்களா இல்லை அபராதம் கட்டிவிட்டு தொடர்ந்து நச்சுப்புகையை வெளியிடுவார்களா என்பது கேள்விக்குறியே?

**பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் கோரிக்கைகள்:**

1. இவ்வாறு அனல் மின் நிலையங்கள் சூழலியல் மாசுபாட்டினை ஏற்படுத்த அரசே அனுமதிக்குமாறு அமைந் திருக்கும் இந்த புதிய திருத்தத்தை மத்திய அரசு உடனே மறுபரிசீலனை செய்ய வேண்டும்.
2. தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்துப் பழைய அனல் மின் நிலையங்களையும் மூட தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும்,
3. தமிழகத்தில் உள்ள B மற்றும் C பிரிவு நிலையங்களில் காலதாமதமின்றி வரும் 2022 ஆம் ஆண்டுக்குள் FGD உட்பட மாசுப்பாட்டை குறைக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
4. புதிய அனல் மின் நிலைய பணிகளை கைவிட்டுவிட்டு, புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நோக்கி திட்டமிடல் வேண்டும் .

●



# இதோ ஒரு புதிய ஆபத்து

பிரதீப்

கடந்த பிப்ரவரி மாதம், அமெரிக்காவின் தெற்கு மாகாணங்களாகிய Texas, Oklahoma போன்ற பகுதிகளில் புயலுடன் கூடிய கடும் பனிப் பொழிவினால், மின்சாரம் மற்றும் குடிநீர் துண்டிக்கப்பட்டு மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகினர். சுமார் 159 பேர் உயிரிழந்தனர். அமெரிக்காவில் பனி என்பது வழக்கமானது தானே என்கிறீர்களா? டெக்சஸ் மாகாணம் என்பது அமெரிக்காவின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள மிகவும் வெப்பமண்டலமான ஒரு பிரதேசம். இங்கு பனிப்பொழிவு என்பது மிக மிக அரிது. அதிலும் ஒரு வாரம் நீடிக்கக் கூடிய பனிப்புயல் ஒன்றை வரலாற்றில் அந்த மக்கள் இதுவரை கண்டதில்லை என்றே சொல்லலாம்.

அப்படியே அங்கிருந்து ஏறத்தாழ 9000 மைல்கள் கடந்து தென்னிந்தியாவிற்கு வருவோம். இந்த வருடத்தின் துவக்கத்தில் ஜனவரி மாதம் 1—ஆம் தேதி முதல் 17—ஆம் தேதி வரை தமிழகத்திலும், கேரளாவிலும் திடீரென கனமழை பெய்தது. அது வழக்கத்துக்கு மாறான மழை என்பதை கவனித்தீர்களா? இந்திய வானிலை ஆய்வு மைய அறிக்கையின் படி தமிழ் நாட்டில் வழக்கத்தை விட 60 சத—விகிதம் அதிகமான மழை பெய்தது. இதனால் சுமார் 1 மில்லியன் ஹெக்டர் நிலப்பரப்பில் உள்ள பயிர்கள் நீரில் மூழ்கியது. கேரளா மற்றும் கர்நாடகாவிலும் இதே நிலைமை தான்.

இந்த திடீர் கன மழை எதனால் ஏற்பட்டது என்று நீங்கள் சிந்தித்தது உண்டா? இவ்வாறு மிக அசாதாரணமான காலநிலை மாற்றங்கள் உலகம் முழுவதும் நடப்பதற்கு காரணம் என்ன? அமெரிக்காவில் நடந்த பனிப்புயலுக்கும், நம் தென்னிந்தியாவில்



நடந்த அசாதாரண மழைபொழிவிற்கும் காரணம் ஒன்று தான் என்கின்றனர் வானியல் அறிஞர்கள். அந்த காரணம் என்னவென்றால், கடந்த ஜனவரி 5—ஆம் தேதி, இங்கிருந்து 8000 கிமீ தொலைவில் ஆர்டிக் பகுதியில் ஏற்பட்ட திடீர் படைமண்டல சூடேற்றம் (Sudden Stratospheric Warming) என்கிற ஒரு கால நிலை மாற்றம்.

அப்படி என்றால் என்ன? என்று புரிந்து கொள்ள, சற்று அறிவியலுக்குள் சென்று பார்ப்போம். முதலில் நம் வளிமண்டலத்தில் இருந்து துவங்கலாம். நமது வளிமண்டலம் என்பது, அடி வளிமண்டலம்(Troposphere), படை மண்டலம் (Stratosphere), இடை மண்டலம் (Mesosphere), வெப்ப வளிமண்டலம் (Thermosphere) , புறவளி மண்டலம் (Exosphere) போன்ற பல பகுதிகளை கொண்டது. இவற்றுள், பூமியின் மேற்பரப்பில் இருந்து 6—20 கிமீ வரை உள்ள பகுதியை அடி வளிமண்டலம் என்றும், அங்கிருந்து சுமார் 50 கிமீ வரை உள்ள பகுதியை படை மண்டலம் என்றும் குறிப்பிடுகிறோம்.

இந்த அடி வளிமண்டலத்தில் தான் காலநிலை மாற்றங்களுக்கான நிகழ்வுகள் அனைத்தும் நடைபெறுகிறது. அதற்கு அடுத்து இருக்கும் படை மண்டலத்தில் ஓசோன் படலம் உள்ளது. இதே மண்டலத்தில் தான், பூமியின் வடக்கே துருவ பகுதிகளில் (Northern Polar region) சூழல் காற்று படலம் (Polar Vortex) சுற்றிக்கொண்டு இருக்கும்.

இதனைப் பற்றி இன்னும் விரிவாக புரிந்து கொள்ள, பூமியின் இரண்டு முக்கியமான காற்றோட்டங்களை பற்றி தெரிந்து கொள்வது அவசியம். ஒன்று துருவ சுழல் காற்று (Polar Vortex), மற்றொன்று அதிவேகக் காற்றுப்புனல். (Jet Streams).




**துருவ சுழல் காற்று (Polar Vortex) என்பது என்ன?**

நமது பூமியின் துருவ பகுதிகளில் குளிர் காலம் நிலவும் போது, அங்கே சூரிய ஒளி நேரடியாக கிடைக்காது. இதனால் அங்கு வெப்பநிலை மிகவும் குறைவாக இருக்கும், குறிப்பாக சொல்லவேண்டுமானால் அங்கே வெப்பநிலை சுமார் —80 டிகிரி என்கிற அளவில் இருக்கும். இதன் காரணமாக, வட துருவத்தின் மேல் பகுதியில் ஒரு குறைந்த அழுத்த சுழல் காற்று (Low pressure circulating air current) உருவாகி, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி காற்று வேகமாக சுழலும். இது தான் Polar Vortex. இவை நமது ஊரில் புயலுக்கு முன் வங்க கடலில் உருவாகும் குறைந்த அழுத்த தாழ்வு நிலை போன்றது தான். ஆனால், அளவில் மிகப் பெரியது மற்றும் துருவ பகுதிகளில்







மட்டுமே காணப்படும். மேலும் இந்த காற்று தான் துருவ பகுதியின் குளிர் நிலையை சீராக்குகிறது.

**காற்றுப்புனல்** (Polar Jet Streams) **என்றால் என்ன?**

அதே குளிர் காலத்தில், நம் நிலப்பரப்பிற்கும் துருவ கடற்பரப்பிற்கும் இடையே உள்ள வெப்பநிலை வேறுபாட்டால், நாம் மேலே பார்த்த துருவ சுழல் காற்றினை சுற்றி ஒரு அதிவேக மற்றும் வலுவான காற்றுப்புனல் (Jet Stream) உருவாகும். இதை எளிமையாக சொல்லப்போனால், ஒரு பெரிய நதி போல பாயும் காற்று என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த காற்று பூமிக்கு மேல் 8 முதல் 15 கி.மீ உயரத்தில் சீராக ஓடிக் கொண்டிருக்கும். இந்த காற்றுப்புனல் தான் துருவத்தின் உள்ளே சுழலும் பனிக் காற்றினை (Polar Vortex) துருவ பகுதியை விட்டு வெளியே செல்லாமல் பார்த்துக் கொள்கிறது.

சில நேரங்களில், இந்த வெப்ப நிலை வித்தியாசம் அதிகமாவதால், Rossby Waves எனப்படும் பூமியின் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி பாயும் காற்று வலுவடைந்து, படை மண்டலத்தில் உள்ள காற்று புனலை (Jet Stream) தாக்கி வலுவிழக்க செய்யும். இந்த காரணத்தினால் துருவ சுழல் காற்று (Polar Vortex) , படைமண்டலத்தில் இருந்து அடிவளிமண்டலத்திற்கு கீழே இறங்கும் . இதனால் அந்த பகுதியில் காற்றழுத்தம் அதிகரித்து, வெப்பநிலை திடீரென மிக அதிக அளவிற்கு உயரும். இது ஒன்று முதல் ஐந்து நாட்களுக்குள் சுமார் 50 டிகிரி வரை உயரக்கூடும். இதுவே திடீர் படை மண்டல சூடேற்றம் (Sudden Stratospheric Warming) ஆகும்.

இந்த திடீர் படை மண்டல சூடேற்றம் ஏற்பட்டால், துருவ சுழல் காற்று படலம் (Polar Vortex) மற்றும் அதிவேகக் காற்றுப்புனல் (Polar Jet Streams), போன்ற குளிர் காற்று தன்னிலை குலைந்து அதன் எல்லை தாண்டி தெற்கு நோக்கி நிலப்பரப்பிற்கு பாயும். அதன் தாக்கத்தினால் தான் இந்தத் தீவிர பனிப் புயல்களும், கன மழையும் ஏற்படுகிறது. இவை வட ஆசிய ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் கடும் குளிர் காலமும், அதே நேரத்தில் மத்திய தரைக்கடல் பகுதிகளில் புயல், பனி, மழை போன்றவை அதிகமாவதற்கும் காரணமாக அமைகிறது.

இந்த SSW நிகழ்வுகள் முதன் முதலில் 1952 ஆம் ஆண்டு வாக்கில் தான் ரிச்சர்ட் ஸ்செர்ஹங் (Richard Scherhag) எனும் வானிலை ஆராய்ச்சியாளரால் பெர்லின் நகரத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்த நிகழ்வுகளை பற்றிய வழக்கமான தகவல்கள் 1950 முதலும், உலகளாவிய செயற்கைகோள் தகவல்கள் 1970 முதல் தான் கிடைக்கப்பெற்றன. எனவே, நாம் அதன் தாக்கத்தை முழுவதுமாக அறிந்து கொள்ள முடியவில்லை என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனை பற்றிய ஆராய்ச்சிகளும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த

ஆராய்ச்சிகளின் முடிவில் தான் SSW நிகழ்வுகள் ஏற்படுத்தக் கூடிய பாதிப்பின் உண்மையான தாக்கத்தினை கூறமுடியும். ஏற்கெனவே புவி வெப்பமயமாதல் காரணமாக ஆர்க்டிக் பகுதி மிக கடுமையாக பாதிக்கப்பட்டு கொண்டு இருக்கிறது. இந்த நிலையில், SSW நிகழ்வுகள் மேற்கொண்டு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என ஆராய்ச்சியாளர்கள் புரிந்துக் கொள்ள முயன்று வருகின்றனர்.




இந்த SSW இயற்கையான நிகழ்வு தான் என்றாலும், இவை அரிதாக தான் நடந்தன. தற்போது புவி வெப்பமயமாதலால் நிலப் பரப்பிற்கும், கடற்பரப்பிற்கும் இடையே உள்ள வெப்பநிலை வித்தியாசத்தில் மிக அதிக அளவில் வேறுபாடு ஏற்படுகிறது. இதனால், இந்த துருவ காற்றுப் புனல்களின் (Polar Jet Streams) போக்கு வெகுவாக பாதிக்கப்பட்டு, SSW நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்கிறது. இந்த நிகழ்வு, காலநிலைகளிலும், பருவ மாற்றங்களிலும், கடும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை ஆகும்.

இந்த திடீர் படை மண்டல சூடேற்றம் (Sudden Stratospheric Warming) நாம் ஏற்கனவே சந்தித்துக் கொண்டிருக்கும் புவி வெப்பமயமாதல் தொடர்பான பிரச்சனைகளில் மேலும் அதிக பாதிப்புகளுக்கு வழிவகுக்கும். மனிதர்களின் வாழ்வியல் முறைகளால், பூமியின் இயல்பான கால நிலைப்பாடுகள், அதன் போக்கிலிருந்து குலைந்து முரண்பாடான நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது.

இத்தகைய காலநிலை மாற்றங்களால் நிகழும் இயற்கை அழிவுகள் நிச்சயமாக மனிதனால் கட்டுப்படுத்தக் கூடியவை அல்ல. இங்கு காலநிலை மாற்றத்தை கட்டுக்குள் கொண்டு வரும் ‘பாரிஸ் ஒப்பந்தம்’ போன்ற சர்வதேச ஒப்பந்தங்களின் இலக்கை அடைவது பெரிய கேள்விக்குறியாக இருக்கும் நிலையில், இது போன்ற பிரச்சனைகள் நமது மனித குலத்திற்கு மேலும் நெருக்கடியையே ஏற்படுத்தும். இதற்கான ஒரே தீர்வு, புவி வெப்பமடைதலை குறைப்பதற்கான வழிகளை மேலும் தீவிரமாக ஆராய்ந்து, அதை உடனே செயல்படுத்துவது மட்டுமே. இதை செய்தால்தான் பூமியின் காலநிலை சுழற்சி மேலும் அதிகமாக பாதிக்கப்படாமல் தடுக்க முடியும். இல்லையெனில் சாதாரண இயற்கை நிகழ்வுகள் கூட தடம் மாறி பேரழிவுகளை ஏற்படுத்தும்

எதிர்காலத்தில் இந்தியா உட்பட உலகின் பல பகுதிகள் கடுமையான குளிர், மிக அதிக மழைப் பொழிவு, அதீத வெப்பம் போன்ற தீவிர காலநிலை மாற்றங்களை எதிர்நோக்கி தான் உள்ளன. வரும் காலத்தில் சென்னை நகரில் பனிப்பொழிவு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், அது நிச்சயமாக நமக்கு மகிழ்ச்சியான செய்தி கிடையாது. மாறாக மனித இனத்தின் அழிவிற்கே வழிவகுக்கும்.

**கடந்த பத்து ஆண்டுகளில் SSW நிகழ்வுகள் ஏற்படுத்திய பெரும் தாக்கங்களில் சில:**

*பிப்ரவரி 2, 2010:* ஒரு வலுவிழந்த ssw நிகழ்வு — பெரும் தாக்கம் ஏற்படுத்தவில்லை. ஆனாலும் விஞ்ஞானிகள் இந்த நிகழ்வுகளின் நடைமுறையை சற்று ஆழமாக புரிந்து கொள்ள உதவியது. *ஜனவரி 6, 2013:* ஒரு வலுவான ssw நிகழ்வு ஆசியா ஐரோப்பாவில் நிகழ்ந்தது.

அதன் விளைவாக, கஜகஸ்தான், தெற்கு ரஷ்யா மற்றும் வட மேற்கு சீனப் பகுதிகளில் கடுமையான குளிர் காலத்தை கொண்டு வந்தது. *பிப்ரவரி 12, 2018:* ஒரு வலுவான ssw நிகழ்வு, வடகிழக்கு அமெரிக்க மாகாணங்களில் பல சூறாவளிகளையும், மிக அதிக பனிப் பொழிவையும் தந்தது. மேற்கு ஐரோப்பாவும் கடும் புயல்கள் மற்றும் கடும் குளிரை சந்தித்தது. கொச்சி மற்றும் தஞ்சாவூரில் அதிக மழைப் பொழிவை தந்தது.

*ஜனவரி 2, 2019:* ஒரு வலுவான ssw நிகழ்வு, (western disturbance) காற்றில் கடுமையான சீற்றத்தை ஏற்படுத்தி, வட இந்தியாவின் வெப்பநிலையை குறைத்தது. துருவசுழல் காற்று மூன்று பிரிவுகளாக பிரிந்து அதன் தென் பகுதிகளில் கடும் குளிரை ஏற்படுத்தியது. *ஜனவரி 5, 2021:* ஒரு வலுவான ssw நிகழ்வு, தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகாவில் கடுமையான மழை பொழிவை ஏற்படுத்தியது.

●



ஜீயோ டாமின்

# எளிமை – வறுமையல்ல வளமை!

மனதை ஒருமுகப்படுத்திச் செய்ய வேண்டிய தீவிர வாசிப்பு, எழுத்து போன்றவற்றில் ஈடுபடுபவர்களாகட்டும் இல்லை படிக்கும் மாணவர்களாகட்டும் பெரும்பாலும் பலரும் அதற்கானத் தகுந்த நேரமாக அதிகாலை நேரத்தையே தேர்ந் தெடுக்கின்றனர். சிலருக்கு பின்னிரவு நேரம்கூட மிகச் சரியானதாய் அமைவதுண்டு. அதிகாலையோ இல்லை பின்னிரவோ இரண்டுக்கும் பொதுவான ஒரு அம்சம் உண்டென்றால் அது ஆழ்ந்த நிசப்தமும் குறைந்த ஒளியும்தான். பெரும்பாலான நேரங்களில் நம் மனதுக் கிதமான இனிய இசையோ இல்லை துள்ளி நடனமாடச் செய்யும் பாடல்களோ நமக்கு வலி நிவாரணியாகவும் புத்துணர்ச்சி ஊட்டுபவையாகவும் இருப்பது உண்மைதான்.




ஆனால், இசையைவிட நிசப்தமே ஆழ்ந்த அமைதி தருவதென்றும் படைப்பூக்கம் தரவல்லதென்றும் ஆய்வுகள் சொல்கின்றன. போருக்குப் பின்பும்கூட ஒரு மயான அமைதியும் நிசப்தமும் நிலவுவதுண்டு. நான் இங்குக் குறிப்பிடும் நிசப்தம் அதுவல்ல; மாறாக இரைச்சலின்மையால் தேவையற்றச் சத்தங்களின் இன்மையால் வரும் ஆழ்ந்த அமைதி.

மனதை மயக்கவல்ல இனிய இசையானது தன் மீது அதீத கவனத்தைக் கோருகிறது. ஆனால், ஒரு படைப்பாளிக்கோ இல்லை மாணவனுக்கோ இசையின் மீதன்றித் தான் செய்யும் பணியின் மீதோ இல்லை சிந்தனையின் மீதோ கவனத்தைக் குவிக்க வேண்டியிருக்கிறது. ஆழ்ந்த நிசப்தத்தில் எழும் மூச்சுக்காற்றின் ஒலி கூட சில நேரங்களில் பாரமாகி அவனது ஒருமுகப்படுத்தலைத் தடுக்கக்கூடும். ஒரு படைப்பாளிக்கான இசை அவனது படைப்பிலேயே இருக்கிறது. அதுவே அவனுக்கான உத்வேகத்தையும் ஆழ்ந்த மகிழ்ச்சியையும் தருகிறது.

இதை ஒத்ததேதான் வெளிச்சமும்கூட. இசைதரும் இன்பம் போன்றே கண்களுக்கு விருந்தாகும் காட்சிகள் தரும் இன்பம் அலாதியானது. ஆனால், படைப்பாளிகளும் மாணவர்களும் தாம் கவனம் குவிக்கவேண்டிய ஒற்றைப் பொருளைத் தவிர அனைத்தையும் இருட்டாக்கும் ஒரு மேஜை விளக்கிலேயேதான் அதிக படைப்பூக்கம் பெறுகின்றனர்.

மேலோட்டமாய்ப் பார்க்கும்போது நிசப்தமும் இருளும் ஒரு நீண்ட முடிவற்ற வெறுமையைக் காட்டுகின்றன. ஆனால், ஆழ்ந்து அனுபவித்தால் நிசப்தமும் ஒரு இசைதான். இருளும்கூட கண் கொள்ளாக் காட்சிகளின் நீட்சிதான் என்பதை உணர முடியும். ஒரு ஓவியனின் எண்ணத்தில் உருவாகிக் கருவாகி உயிர் பெற்றுக்கொண்டிருக்கும் ஓவியத்தைவிட அவனுக்கென்ன பெரியக் காட்சியின்பம் இருந்துவிட முடியும்? தன் குழந்தையின் மழலை மொழியை படுக்கையில் அசைபோடும் ஒரு தாய்க்கு எந்த இசை அதைவிடப் பெரிய இன்பம் கொடுத்திட முடியும்?

நிசப்தமும் இருளும் வெறுமையல்ல, எளிமையுமல்ல; மாறாக வளமை; வெறுமையாய்த் தோன்றும் எளிமை இங்கு வளமையின் குறியீடு; இந்த வெறுமை ஆழ்ந்த அமைதியைக் கொணர்கின்றது; நம்மை நாமே உற்று நோக்கச் செய்கின்றது. மனதை ஒருமுகப்படுத்தச் செய்கின்றது. படைப்பூக்கத்தை அதிகரிக்கின்றது. நமது சொந்த இசையை நமக்குள்ளிருந்து வெளிக்கொணர்கின்றது. நம் மனதின் சொந்தக் காட்சிகளை அகக் கண்முன் விரிக்கின்றது. எல்லையற்ற மனதின் கேள்விகளுக்கு விடைகளைத் தேடிப் பதில்களைத் தருவிக்கிறது. இன்னிசையானது அந்தக் குறிப்பிட்டக் கணத்துக்கான ஒரு அமைதியைக் கொடுத்தாலும் இசை நிறுத்தப்பட்டதும்



மீண்டும் கவலைகள் ஆக்கிரமிக்கத் தொடங்கி விடுகின்றன. ஆனால் அமைதி தரும் நிசப்தம் என்னை என்னோடு பேசக்செய்கிறது. என் கவலைகளோடு உரையாடச் செய்கிறது. ஏதேனும் ஒரு சமரசத்தை எட்டச் செய்கிறது. கழிந்தவற்றையும் எதிர்வருவனவற்றையும் அசைபோடுவதற்கான அவகாசத்தைத் தருகிறது. இசை ஒரு வலி நிவாரணியென்றால் நிசப்தம் பிணிநீக்கி. இருளானது கட் புலன்களால் உணரமுடியாத காட்சிகளைப் பார்க்கச் செய்யும் பேரொளியின் வழிகாட்டி. அதனால்தானே அகத்தில் அமைதியையும் ஒளியையும் தேடும் எவரும் முதலில் தம் கண்களை மூடிக்கொள்கிறார்? செவிகளைச் சாத்திக் கொள்கிறார். இந்தக் குறைவற்றச் செல்வமான வளமான வெறுமையை நோக்கியே ஆழ்ந்த மகிழ்ச்சியையும் அமைதியையும் தேடும் எல்லா மனிதப் பயணங்களும் நகர்கின்றன.

இங்கு நாம் கண்ட நிசப்தமும் இருளும் எளிமையின் சிறு உதாரணங்கள்தான். இந்த வளமான எளிமையை நோக்கியத் தேடலின் நீட்சியாகவே இன்று Minimalism என்ற வாழ்க்கைமுறை உலகெங்கும் பிரபல மாகிவருகிறது. 'குறைவானப் பொருட்களோடு நிறைவான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல்' என்ற பொருள்படும் Minimalism என்னும் ஆங்கில வார்த்தைக்கு நிகரானத் தமிழ்ச் சொல் இருப்பதாய்த் தெரியவில்லை. எனினும் 'எளிமை' என்ற வார்த்தை இப் பொருளுக்கு ஓரளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது. மேலும் Minimalism நோக்கியப் பயணத்தின் முதல் படியான 'தேவையற்ற பொருட்களைக் குறைத்தல்' என்று பொருள்படும் 'Decluttering' என்ற சொல்லுக் நிகரான சரியான தமிழ்ச் சொல் இல்லை. இதைக் குறிக்க 'வெறுமையாக்கல்' என்ற சொல்லை இங்கு நான் பயன்படுத்து கிறேன்.

"Minimalism is not about having less; it is about making room for more of what matters" என்ற ஒரு வாக்கியம் மிக அழகாக எளிமை குறித்து ஒரு வரியில் சொல்கிறது. அதாவது "எளிமை என்பது குறைவோடு வாழ்வதல்ல; மாறாக (வாழ்வில்) எது அவசியமோ அதற்கு அதிக இடம் கொடுத்து வாழ்வது" என்கிறது இந்த வாக்கியம். இதைவிட எளிமையாக இந்தக் கட்டுரையை ஒருவரியில் சொல்ல முடியாது என்று தோன்றுகிறது. எப்படி மனதுக்கு இதமான இசையின் இல்லாமையானது வாழ்வை இன்னொரு புதிய வெளிச்சத்தில் நமக்குக் காட்டுகிறதோ அப்படியே நம் வீடுகளில் எங்கும் இறைந்தும் அடைத்துக்கொண்டும் ஆக்கிரமித்துக் கொண்டும் கிடக்கும்



பொருட்களின் இல்லாமை நாம் அதுவரைக் கண்டிராதப் புதிய விசாலமான பரப்பை நம் வீட்டிற்குள்ளேயே நமக்குக் காட்டுகிறது. வீடென்ற அந்த விசாலமானப் பரப்பு பொருட்களைச் சேமித்து வைப்பதற்கானது அல்ல. மனிதர்கள் புழங்குவதற்கானது, வாழ்வதற்கானது.

இன்றைய நவீன வாழ்க்கை முறையில் நாம் பயன்படுத்தும் பொருட்கள் தொடர்ந்து அளவில் மிகச் சிறியதாய் மாறிக் கொண்டிருக்கின்றன. இன்றைய நானோ யுகம் பொருட்களைப் பயன்பாட்டுக்கு இலகுவாய் இருக்கும் வண்ணம் மிகச்சிறியதாய் வடிவமைத்துத் தருகிறது. தர்க்க ரீதியாகப் பார்த்தால் நானோத் தொழிற்நுட்பத்தால் நம் வீடுகளில் பொருட்களுக்கான இடத்தேவைக் குறைந்து மனிதர்கள் வாழ்வதற்கான இடம் அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் நேர்மாறாக நம் மேஜைகளும் அறைகளும் வீடுகளும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குப் பொருட்களால் நிறைந்துள்ளன. முன்பு அதிக எடையுடன் கனமாக இருந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்று மெல்லியதாய் மாறியிருந்தாலும் முன்பை விட அதிகமாய் முழுச் சுவரையும் ஆக்கிரமிக்குமளவு பெரிய திரைகளாய் பரிணமித்திருக்கின்றன.

நம் பெற்றோர்கள் வைத்திருந்ததைவிட அதிகமான ஆடைகள், அதிகமான அலங்காரப் பொருட்கள், அதிகமான ஆபரணங்கள், அதிகமானப் பாத்திரங்கள், அதிகமான கலைப் பொருட்கள், அதிகமான உடற்பயிற்சி சாதனங்கள் என ஏராளம் பொருட்களை நாம் இப்போது பெற்றிருக்கிறோம். நாம் குழந்தைகளாய் இருந்தபோது பயன்டுத்தியப் பொருட்களைவிட ஏராளமானப்பொருட்களை நம் பிள்ளைகள் பெற்றிருக்கின்றனர். பொருட்களை வாங்குவதும் (Shopping) அவற்றை ஒழுங்குபடுத்துவது பராமரிப்பது போன்றவையேகூட இப்போது நம் முக்கிய வேலைகளில் ஒன்றாகிவிட்டிருக்கிறது. பொருட்களை வாங்குவதற்காகவே உழைப்பது போலாகிவிட்டது.

**எவ்வளவு அதிக பொருட்களோ அவ்வளவு அதிக வேலைப்பளு.**

இறைந்து கிடக்கும் தேவையற்றப் பொருட்கள் ஒவ்வொரு முறை அவற்றைச் சுத்தப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் நமது நேரத்தையும் உழைப்பையும் கோருகின்றன. அவை நம் மதிப்புமிக்க வீட்டின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக்கொள்கின்றன. நமக்கு ஒரு இனம்புரியாத அழுத்தத்தைக் கொடுக்கின்றன. நம் படைப்பூக்கத்தைக் குறைக்கின்றன. நாம் உழைத்துச் சம்பாதிக்கும் பணத்தில் பெரும் பகுதியை விழுங்கிக்கொள்கின்றன. எல்லா வற்றிற்கும் மேலாக அவை தம் உற்பத்தியிலும் பயன்பாட்டிலும் கழிவு நீக்கத்திலும் சூழலை வெகுவாகப் பாதிக்கின்றன. பொருட்களின் மிகை உற்பத்தி மற்றும் நுகர்வினால் ஏற்படும் சூழல் சீர்கேடுகளை முன்பே பல கட்டுரைகளில் நாம் விரிவாய் பார்த்தாயிற்று.

மாறாக எளிமையான வெறுமையான வீடுகள் / பணியிடங்கள் நம் மன அமைதிக்கும் கவனக் குவிப்புக்கும் உதவுகின்றன. பிள்ளைகளோடும் நம் அன்புக்குரியவர்களோடும் செலவிட விசாலமான இடத்தைக் கொடுக்கின்றன. தூசி தட்டுவது, அடுக்குவது முதல் பராமரிப்பது, பழுதுபார்ப்பது, தூக்கிஎறிவது, மீண்டும் வாங்குவது என தேவையற்ற வேலைப் பளுவைக் குறைக்கின்றன. இதன் மூலம் பணத்தை மிச்சப்படுத்துகின்றன. அறைக்கு நல்லக் காற்றோட்டைத்தையும் போதுமான ஒளியையும் தருகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக பல மரங்கள் நடுவதைவிடப் பெரிய சூழல் பங்களிப்புக்குக் காரணமாகின்றன.

இதுவரை மேல்தட்டு மக்களின் பொழுது போக்காகவும் நோயாகவும் இருந்த 'ஷாப்பிங்' இப்போது நடுத்தர வர்க்கத்தையும் பீடித்திருக்கிறது. வார இறுதியானால் போதும் நண்பர்களோடோ இல்லைக் குடும்பத்தோடோ பல்லடுக்கு வணிக வளாகங்களில் நுழைந்து அங்கு வாசலில் வைக்கப்பட்டிருக்கும் வெறும் டிராலியை உருட்டிக்கொண்டே உள்நுழைந்து கிரெடிட் கார்டை தேய்த்துவிட்டுப் பின்னர் வெளியேறும்போது ஒரு ஆட்டோவில் ஏற்றுமளவுக்கு பொருட்களை வாங்கி விடுகின்றோம். இத்தனைக்கும் உள்ளே நுழையும்போது எந்தப் பொருளை வாங்குவது குறித்தும் பெரிய யோசனை இருந்திருக்காது. ஆனால், அங்கு கண்களுக்கு குளிர்ச்சியாய் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பொருட்களைப் பார்த்ததும் அவை நமக்கு அத்தியாவசியப் பொருட்களாகி விடுகின்றன. ஆனால், வீட்டை நிறைக்கும் இப் பொருட்களால் நாம் வாழ்வில் மிக முக்கியமானதாய்க்

கருதும் ஆழ்ந்த மன அமைதியையோ இல்லை நீடித்த மகிழ்ச்சியையோப் பெற முடிகிறதா? இல்லைக் குறைந்தபட்சம் நாம் வாங்கும் பொருட்கள் அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்துகிறோமா?

இரண்டு பெரிய மேஜைகள் அருகருகே போடப்பட்டிருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். ஒரு மேஜையின் மேல் ஒரு சில காகிதங்கள், கோப்புகள், புத்தகங்கள் இரண்டு அடுக்குகளாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. இன்னொரு ஓரத்தில் பல வண்ணக் கலர் பென்சில்கள் மற்றும் பேனாக்கள் ஒரு பென் ஸ்டாண்டிலும், ஹைலைட்டர்கள், பெர்மனண்ட் மார்க்கர், ஒயிட்னர், எரேசர், ஸ்கேல், ஸ்டாப்லர், பஞ்சிங் மெஷின் போன்ற சகல ஸ்டேஷனரி பொருட்களும் வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

அத்தோடு ஒரு தண்ணீர் புட்டி, மொபைல் வைக்க ஒரு ஸ்டாண்ட், ஒரு சில சாமி படங்கள், செயற்கை பூச்செண்டு உட்பட சில அழகுப் பொருட்கள், பேப்பர் வெயிட் போன்றவை அனைத்தும் வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். இன்னொரு மேஜையிலோ ஒரே ஒரு பென்சில் மற்றும் உங்களுக்குப் பிடித்தமான ஒரு புத்தகத்தைத் தவிர எதுவும் இல்லை. வெறுமையாய் இருக்கிறது. களைத்துச் சோர்ந்து போயிருக்கும் நீங்கள், 'உங்களுக்கே உங்களுக்காய் செலவிட' அரை மணிநேரம் கொடுக்கப்படுகிறது என்றால் நீங்கள் எந்த மேஜையைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

முதல் மேஜை உங்கள் பதில் என்றால் இது உங்களுக்காக எழுதப்பட்டக் கட்டுரை அல்ல. இரண்டாவது மேஜை உங்களைக் கவர்கிறது என்றால் முதல் மேஜை போன்ற நம் வீட்டை இரண்டாவது மேஜை எளிமையானதாக எப்படி மாற்றுவது என்பதற்கானச் சில ஆலோசனைகளை இங்குப் பார்ப்போம்.

எப்படி எளிமையாக இருப்பது, இல்லை எப்படி நம் வாழிடத்தை எளிமையாக்குவது என்பது குறித்து இணையத்தில் ஏராளமான பயனுள்ளத் தகவல்கள் கிடைக்கின்றன. Minimalism மற்றும் Decluttering என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தித் தேடினால் ஏராளம் பயனுள்ளத் தகவல்கள் நமக்குக் கிடைக்கும். 'Becoming Minimalist' என்ற தளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சில எளிய வழிமுறைகளைச் சுருக்கமாகப் பார்ப்போமா?

1. குப்பைக்கு அனுப்ப, மறுசுழற்சி செய்ய, தேவைப்படுபவர்களுக்குக் கொடுக்க, வைத்துக்கொள்ள, இடமாற்றம் செய்ய என்று அடையாளமிட்டு 5 பெட்டிகளை எடுத்துக்கொள்ளுங்கள்.
2. எங்கிருந்துத் தொடங்கப் போகிறீர்கள் எங்கு முடிக்கப்போகிறீர்கள்? எப்போது செய்யப்போகிறீர்கள் என்ற ஒரு குறிப்பை தயாரித்துக்கொள்ளுங்கள்.
3. ஒருநாள் 5 நிமிடங்கள் ஒதுக்குவதிலிருந்துத் தொடங்குங்கள்: எளிமையாக்கல் என்பது மிகுந்த அயற்சி தரக்கூடியச் செயல். எனவே மிக மெதுவாகவே இவற்றைச் செய்யமுடியும். உங்கள் மேஜை டிராயரிலிருந்தோ இல்லை ஏதேனும் ஒரு அறைக்கலனின் ஒரு மூலை யிலிருந்தோ செய்யத் தொடங்குங்கள்.
4. ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு தேவையற்றப் பொருள் வீட்டிலிர்ந்து வெளியேற வேண்டும் என்று முடிவு செய்துகொள்ளுங்கள். அது ஒரு சாதாரணப் பயன்படுத்தாதப் பேனாவாகவோ இல்லை வீட்டை அடைத்துக்கொண்டிருக்கும் உடற் பயிற்சிக் கருவியாகவோ (எந்தக் கருவிகளும் இன்றி உடல் எடையை மட்டும் பயன்படுத்தியே உடலை வலுவாக்கும் ஏராளம் உடற்பயிற்சி முறைகள் இருக்கின்றன) இருக்கலாம்.
5. முதல் மூன்று பெட்டிகளும் விரைவில் முழுமையாக நிரப்ப வேண்டும் என்று முடிவு செய்துகொள்ளுங்கள். உங்கள் வீட்டில் இருக்கும் எந்தப் பொருளாயினும் இந்த ஐந்துப் பெட்டிகளில் ஒன்றுக்குள் வரவேண்டும்.
6. கடந்த நான்கு ஐந்து மாதங்களில் நீங்கள் ஒரு ஆடையைப் பயன்படுத்திய தில்லையென்றால் பெரும்பாலும் அதை நீங்கள் எப்போதும் பயன்படுத்தப் போவதில்லை. அது பிறருக்குக் கொடுக்கும் நிலையில் இருந்தால் அதற்கானப் பெட்டியிலும் இல்லைப் பொருத்தமான வேறொரு பெட்டிக்கும் மாற்றுங்கள்.



7. உங்களை உற்சாகப்படுத்த நீங்கள் செயலில் இறங்குவதற்கு முன்பும் பின்பும் உங்கள் அறையைப் புகைப்படம் எடுத்துக்கொள்ளுங்கள்.

8. பொருட்களை வகைப்படுத்துவதிலும் கையாள்வதிலும் உங்கள் நண்பர்கள் குடும்பத்தினர்கள் உதவியை நாடுங்கள்.

9. காகிதம், நெகிழி, கண்ணாடி, உலோகங்கள் போன்ற மறு சுழற்சி செய்யத் தக்கப் பொருட்களை அவற்றை மறு சுழற்சிக்காகச் சேகரிக்கும் நபர் களுக்கு வழங்குங்கள்.

10. பயன்படுத்தத் தகுந்த நல்ல நிலையில் உள்ள பொருட்களை தேவைப் படுபவர்களுக்கு நேரடியாகக் கொடுக்க முடியவில்லையெனில் பயன்படுத்தியப் பொருட்களை விற்கும் இணைய தளங்களின் உதவியை நாடுங்கள்.

11. எப்போதாவது தேவைப்படும் என்று பொருட்களைச் சேர்த்து வைக்கும் பழக்கம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் ஏற்கனவே அப்படிச் சேர்த்து வைத்திருக்கும் பொருட்களைப் பயன் படுத்தியிருக்கிறீர்களா என்பதைப் பரிசீலனை செய்யுங்கள்.

12. எல்லாவற்றிற்கும் மேலாக அதிக சிரமப் பட்டு வீடுகளில் இருந்து வெளியேற்றியக் குப்பைப் பொருட்களை மீண்டும் கடைகளிலிந்து வாங்கிச் சேர்க்காதீர்கள்.

எந்தப் பொருட்களாலும் நம் மதிப்பை உயர்த்திக் கொள்ள முடியாது. எந்தப் பொருட் களாலும் நமக்கு மகிழ்ச்சியைக் கொணர முடியாது. பொருட்கள் மனிதருக்கும் இந்தப் புவிக்கும் சுமை. பொருட்களற்ற வெறுமை தரும் எளிமை என்பது வறுமை அல்ல மாறாக வளமை. ●

# இந்திய வனச்சட்டத்தை திருத்த முயலும் அரசு, கேள்விக்குறியாகும் வனப் பாதுகாப்பு!

**மயங்க் அகர்வால் | தமிழில் : பிரதீப் இளங்கோவன்**



இந்தியா அரசு மீண்டும் ஒருமுறை இந்திய வனச்சட்டம் 1927 ல் திருத்தம் கொண்டு வர முடிவு செய்திருக்கிறது, இதற்கு முன் மத்திய அரசின் சட்டத்திருத்தம் கொண்டு வரும் முடிவானது மக்கள் இயக்கங்களின் வலுவான எதிர்ப்பிற்கு பின் திரும்பப்பெறப்பட்டிருந்தது.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்து தற்போது வரை 94 ஆண்டுகளாக நடைமுறை யிலிருக்கும் பழமையான சட்டமான இந்திய வனச்சட்டம் 1927 ஆனது, வனசார் சட்டங்கள், வனப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து, மரங்கள் மற்றும் வனத்தின் இதர பொருட்கள் மீதான வரி விதிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய மிக விரிவான சட்டமாகும்.

கடந்த ஏப்ரல் 8 2021 அன்று, சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான மத்திய அமைச்சகம், இந்திய வனச் சட்டம் 1927ல் திருத்தம் செய்வதற்கான வரைவை தயார் செய்ய தன்னிச்சையான ஆர்வத்தோடு முன்வரும் அமைப்புகளிலிருந்து ஆலோசனை வழங்கும் அமைப்புகளை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பையும் வெளியிட்டுள்ளது. இந்தியா வனச் சட்டம் 1927ல் திருத்தம் கொண்டு வர மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள், மத்திய அமைச்சகங்கள், இதர அமைப்புகள் ஆகியவற்றின் ஆலோசனையின் அடிப்படையில் விரிவான வரைவை தயார் செய்யவும் மத்திய வனத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இந்த சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முன்வரும் அமைப்புகள் குறித்து மத்திய அரசு தனது இணையதளத்தில் வெளி யிட்டுள்ள அறிவிப்பில், சட்டத் திருத்தம் கொண்டுவரும் மத்திய அரசின் முடிவானது, சமகால தேவைகளுக்கு எற்றவாறு, பல்வேறு அமைச்சகங்கள்/ அரசு அமைப்புகள் கொண்டு வந்துள்ள சட்டங்களை உள்ளடக்கியதாக மறுஆய்வை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. மேலும், இந்த சட்டத் திருத்தமானது, சிறிய குற்றங்களுக்கு குற்றங்களிலிருந்து விலக்களிப்பது மற்றும் சிறிய குற்றங்களை விரைவிலேயே தீர்ப்பது,

மக்கள் மீதான சுமைகளை குறைத்தல், அபாரதங்களை முறைப்படுத்துதல், மக்களை துன்புறுத்தப்படுவதில் இருந்து பாதுகாத்தல், இடையூறு ஏற்படுத்தும் குற்றவியல் நடைமுறைகளிருந்து விடுவித்தல், வளங்களை முறையாக பயன்படுத்தலை அதிகப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், மக்கள் பங்களிப்பை ஊக்குவிப்பது மற்றும் எளிதான வணிக நடைமுறைகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துவதுமெனவும் மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த சில ஆண்டுகளாகவே வன நிர்வாக சட்டத்தில் சட்டத்திருத்தம் கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மத்திய வனத்துறை அமைச்சகம் கூறியுள்ளது. இந்நிலையில், வன நிர்வாகத்தில் நடைமுறையில் உள்ள மிக முக்கிய சட்டமான இந்திய வனச்சட்டம் 1927 ல் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவிருப்பது கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. கடைசியாக கடந்த 2017 ஆம் ஆண்டு வனச் சட்டத்தில் சட்டத்திருத்தம் வர மத்திய அரசு முடிவு செய்து அதன் முதல் வரைவை மக்கள் மத்தியில் கருத்து கேட்புக்கும் அனுப்பியிருந்தது,மேலும் மக்களின் கருத்துகளுக்கு பின்னர் விரிவான, நடைமுறைக் கேற்ற ஆய்வுக்கு பின் இந்திய வனச்சட்டம் 1927 ல் சட்டத்திருத்தம் கொண்டுவரப்படும் என்றும் கூறியிருந்தது.

மேலும், அரசு தெரிவித்திருந்த அந்த விரிவான சட்டதிருத்தத்தில், முறைப் படுத்தப்பட்ட அபராதங்களை நிர்ணயித்தல், வன பொருட்களின் வணிகம் மற்றும் மாநில எல்லைகளை தாண்டி எடுத்து செல்வதிலுள்ள சிக்கல்களை குறைத்தல், அல்லது நாட்டின் பொருளாதார வளர்ச் சிக்காக தேசிய எல்லைகளை தாண்டியும் எடுத்துச் செல்லப்படுவதை ஊக்குவித்தல், காடு வளர்த்தல்/ மரம் நடுதல் மற்றும் காடுகள் அற்ற பகுதியில் தனியார் காடுகளை மேலாண்மை செய்தல்/ வளர்த்தல் போன்ற பணிகளில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மக்கள் அமைப்புகள், தனிநபர்கள் ஆகியோர் சொந்த செலவில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் ஆகிவற்றை உள்ளடக்கி கொண்டுவரப்படு மென்றும் கூறியிருந்தது. அதுமட்டுமல்லாது, மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் காடு வளர்ப்பில் தனியார் துறையை ஈடுபடுத்துவது குறித்தும் நீண்ட நாட்களாகவே மத்திய அமைச்சகம் திட்டமிட்டு வந்துள்ளது. குறிப்பாக கடந்த 2019 ஆம் ஆண்டு வளம் குன்றிய காடுகளில் காடு வளர்ப்பிற்கு தனியார்துறையை ஈடுபடுத்துவது குறித்தான வழிகாட்டுதல்களையும் வழங்கி யிருந்தது கவனிக்கத்தக்கது.

மேலும், மாநில அரசுகள் இயற்றியுள்ள வனச் சட்டங்கள் மற்றும் சட்டதிருத்தத்தின் அடிப்படையில் வனச்சட்டம் 1927 ல் நடைமுறைக்கேற்ற சட்ட திருத்தங்களை கொண்டுவருவதின் மூலம் மாநில அரசுகள் பெற்றுவரும் அதே பயனை அடைய இயலும் என்றும் தெரிவித்திருந்தது. இந்நிலையில், கடந்த மார்ச் 2019 அன்று, இந்தியா வனச்சட்டத்தில் திருத்தும் கொண்டு வருவதற்கான வரைவை மாநில அரசுகளுக்கு அனுப்பி மாநில அளவில் மக்களிடமும், மாநில அமைப்புகளிடமும், தன்னார்வ தொண்டு நிறுவனகளிடமும் 90 நாட்களுக்குள் கருத்து கேட்கவும், இதனடிப்படையில் ஒருமித்த கருத்துக்களையும்,பதிலையும் சமர்பிக்குமாறும் மத்திய அரசு உத்தரவிட்டிருந்தது. அப்போது இந்திய நாடாளுமன்ற தேர்தல் நடக்கவிருந்த சமயம் என்பதால் கருத்து தெரிவிக்க 90 நாட்கள் மட்டுமே அவகாசம் வழங்கியது குறித்து மிகுந்த விமர்சனத்துக்கு உள்ளானது மட்டுமல்லாமல் அதில் குறிப்பிடப் பட்டுள்ள சட்ட திருத்தங்களும் மிகுந்த எதிர்வினைக்கு உள்ளானது.

அந்த சட்ட திருத்தத்தில் வனத்துறைக்கு அதிகளவிலான அதிகாரம் வழங்கப்படிருந்தது குறிப்பாக எந்தவித கேள்வியுமற்று மக்களை சுட்டுத் தள்ளுதல், வன பாதுகாப்பிற்காக அதிக அபராதம் விதித்தல், வளிமண்டல கார்பன் அளவை குறைக்க காடுவளர்ப்பை ஊக்குவித்தல் போன்ற சட்டத்திருத்தங்களை முன்மொழிந்திருந்தது.இந்நிலையில்,இந்தசட்டத் திருத்தமானது வனத்தில் வசிப்பவர்களின் மீதான அநீதிகள் அதிகரிக்க வழிவகுக்கும் என்று சூழலியலாளர்கள் மத்தியிலும், பழங்குடியினர்களின் உரிமைகளுக்காக குரலெழுப்பும் அமைப்புகளின் மத்தியிலும் கடும் எதிர்ப்பு நிலவியது. மேலும், கடந்த நவம்பர் 2019 ஆம் ஆண்டு பழங்குடியின மக்கள் நடத்திய போராட்டங்கள் மற்றும் தேர்தல் சமயம் என்பதால் சில மாநிலங்கள் கொடுத்த

அழுத்தத்தினாலும் இந்த சட்டத்திருத்தம் திரும்பப் பெறப்பட்டது. ஆனால் அந்த சட்டத்திருத்த முயற்சியானது அப்போது முற்றிலுமாக கைவிடப்படாமலேயே இருந்தது. இந்நிலையில் தற்போது மீண்டும் முறையான திட்டமிடலோடு திருத்தப்பட முயற்சி எடுக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து தெரிவித்துள்ள மத்திய வனத்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி, "2014 ஆம் ஆண்டு பாஜக அரசு அமைந்ததற்கு பின் இந்தியாவில் பசுமை சட்டங்களை திருத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது, மேலும் அப்போதிருந்து நாட்டின் சுற்றுச்சூழல் சட்டங்களை தற்போதைய காலத்திற்கு ஏற்ப நிறைய மாறுதல்கள் கொண்டு வருவதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாது இந்திய வனச் சட்டம் 1927 லிலும் தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறும் மாறுதல் தேவைப்படுகிறது. எனவே நியமிக்கப்படும் ஆலோசகரின் மிகமுக்கிய பொறுப்பானது, தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு மாற்றங்களை கொண்டு வருவதும், சட்டத்திருத்தம் குறித்த சர்ச்சைகள் தவிர்ப்பதில் கவனம் செலுத்துவதுமே ஆகும்," என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

**இந்திய வனச்சட்டம் 1927ல் திருத்தம் செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சிகள்:**

கடந்த 2014 ஆம் ஆண்டு மத்திய அரசு ஆறு முக்கிய சூழலியல் சட்டங்கள் மற்றும் வனச்சட்டங்கள் குறிப்பாக வனச்சட்டம் 1927யை திருத்துவது தொடர்பாக ஓய்வுபெற்ற அமைச்சரவை செயலர்டீ.எஸ்.ஆர் சுப்ர மணியன் தலைமையில் உயர்மட்ட குழுவை நியமித்தது. இந்நிலையில், நவம்பர் 2014 அன்று, அந்த குழுவானது விரிவான அறிக்கையை சமர்ப்பித்தது, ஆனால் அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்த பலதரப்பட்ட சூழலியல் அமைப்புகள், வல்லுனர்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

அப்போதிலிருந்து மத்திய அரசு எப்படியாவது சட்டத்திருத்தம் கொண்டுவரவும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளவும் முயன்று வருகிறது. சில முயற்சிகளில் வெற்றியையும் பெற்றுள்ளது. இதனை தொடர்ந்து மத்திய அரசானது சட்டதிருத்தம் கொண்டுவர, மாநில அரசுகள் மற்றும் இதர அமைப்புகளின் விரிவான கருத்துக்களையும் கேட்டிருந்தது, குறிப்பாக தேசிய பசுமை தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்புகள், உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள முக்கிய தீர்ப்புகள் ஆகியவற்றையும் கவனத்தில் எடுத்து கொள்வதாகவும் கூறியிருந்தது.

ஆனாலும், காடு வளர்ப்பு திட்டத்தில் தனியார் நிறுவனங்களை அனுமதிப்பது மற்றும் வனத்துறைக்கு அதிக அதிகாரம் வழங்குவது ஆகிய சட்டதிருத்தங்களுக்கு சூழலியலாளர்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இந்த சட்டத்திருத்தம் குறித்து தெரிவித் துள்ள வனப்பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் கண்ணியத்திற்கான தேசிய அமைப்பின் செயலாளர் கோபால கிருஷ்ணன், "சில ஆண்டுகள் இடைவெளியில் தொடர்ச்சியாக இந்திய வனச் சட்டம் 1927ல் சட்டத்திருத்தம் கொண்டுவருவதற்கு தொடர்ந்து முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், ''வன உரிமை சட்டம் 2006 நடைமுறைப்படுத்தப்பட்டு சரியாக 15 ஆண்டுகள் ஆகிறது ஆனால் தற்போது கொண்டு வரப்படும் சட்டத் திருத்ததில் அதற்கு மதிப்பளிக்கும் வகையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை, அதுமட்டுமல்லாது கடந்த சில ஆண்டுகளாக வணிகத்தை எளிதாக்குவதற்காக இந்திய வன சட்டம் 1927ல் சூழலியல் விதிகளும், வழிகாட்டுதல்களும் மொத்தமாக திருத்தப்பட உள்ளதாக கூறுகிறது, ஆனால் அதில் உள்ள 99% வரைவுகள் வனத்துறையின் அனுமதி பெறுவதின் கீழ் வருகிறது. மேலும் வணிகத்திற்காக சட்டம் எளிமையாக்கப்படும் என்றால் எந்தளவுக்கு எளிமையாக்கப்படும் என்பதும் தெளிவாக குறிப்பிடப்படவில்லை" என்றும் கோபால கிருஷ்ணன் கூறியுள்ளார்.

மேலும், மத்திய வனத்துறை அமைச்சகம் கொண்டுவரும் இந்த சட்ட திருத்தமானது முழுக்கமுழுக்கவனத்துறைக்கு அதிக அதிகாரம் அளித்தலையும், தனியார் நிறுவனங்களுக்கு சாதகமாக செயல்படுவதையுமே முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது என்றும் பழங்குடி மக்களுக்கான தேசிய அமைப்பின் செயலாளர் கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். ●



உயரமான இடி தாங்கி போன்ற பனைமரங்களை கொண்ட பெரும்பனங்கூடல் / பனைமரச்சோலை - பாமோ

**பனையாண்மை - வளம் கூட்டும் வளர்ச்சிக்குப் பனை - பகுதி 2**

# உயிர்காக்கும் பனை

**முனைவர் பா மோ செல்வகுமார்**

அதிக ஆடம்பரமும் நுகர்வுமின்றி இயற்கையோடு இசைந்திணைந் தியங்கும் தற்சார்பான சமுதாய வாழ்வியலே நிலைத்த நீடித்த வளம் கூட்டும் வளர்ச்சிக்கான முதல் படியாகும். தற்சார்பாய் வாழும் எந்தவொரு உயிரியும் முதலில் கருத்தில் கொள்வது உயிர் பாதுகாப்பையே. உளவியல் அறிஞர் மாசுலோவ் தனது தேவை படியமைப்பு கோட்பாட்டில் ((Maslow's hierarchy of needs) முதல் இரண்டு படிகளில் உடலியல் (உயிர்காற்று, நீர், உணவு, உறைவிடம், உடலுறவு, ஓய்வு ) மற்றும் பாதுகாப்பு தேவைகளை(உயிர்பாதுகாப்பு, உடமை பாதுகாப்பு, தொழில் பாதுகாப்பு) குறிப்பிட்டுள்ளார்.

உணவுக்காக காட்டுக்குள் வேட்டையாடி நாடோடியாய் திரிந்த மனித கூட்டம் பின்னர் ஓரிடத்தில் தங்கி உணவுருவாக்க முயற்சிசெய்து ,சோதனை முறையில் வேளாண்மை செய்து பாதுகாப்பாக வாழ முயன்று வெற்றியும் பெற்றது. எந்த ஒரு உயிரிக்கும் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்கள் உயிரை உடமைகளை காப்பாற்றிக்கொள்வது என்பது அதன் அடிப்படையான உள்ளார்ந்த (அனிச்சை செயலாகவே உள்ளிருக்கும்) உணர்வாகும். இவ்வுலக வாழ்வில் ஒவ்வொரு உயிரியும் தன் உயிரை உடமையை காத்துக்கொள்ள மற்ற உயிர்களோடு இயற்கையோடு போராட வேண்டியுள்ளது. மனித குமுகாயமும் அதற்கு விதிவிலக்கல்ல.

நீண்ட நாள் உயிரோடு வாழ்ந்து தலை முறையை உருவாக்கி அவர்கள் தங்கள் தலைமுறையை உருவாக்கி வளர்ப்பதை பார்த்துவிட்டு போகவே பெரும்பாலான மனிதர்கள் முயல்கின்றனர். மனிதர்களின் சிந்தனை வளர்ந்ததினாலோ என்னவோ, மற்ற விலங்குகள் போல கூட்டமாக



தோட்டத்தின் வரப்போரம் உயிர்வேலியாக பனை - பாமோ

வெளிப்படையாக வாழ்ந்த பண்பாட்டை கொண்ட மனித சமூகம், மெதுவாக தனித்தனியாக பிரிந்து வீடு கட்டி தோட்டம் உருவாக்கி மூடிய பண்பாடுடைய சமூகமாக மாறியதற்கு வீடு தோட்டங்களை சுற்றி மறைவுக்கும் பாதுகாப்புக்கும் எல்லையை வரையறுக்கவும் அமைக்கபடும் வேலிகள் சான்றாக நிற்கின்றன.

இவ்வுலகின் நெடிய வரலாற்றில் மனித சமுகமானது தன்னைக்காத்துக் கொள்ள, தன் எல்லையினை வரையறுத்துக்கொள்ள, தன்னைச் சுற்றி உள்ள சூழலில் இருப்பன வற்றை (உயிரற்ற பொருட்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகள்) பயன்படுத்திக் கொண்டு வந்திருக்கிறது. இவற்றில் தாவரங்களின் பங்கு மிக இன்றியமையாததாகும்.

போட்டி விலங்குகள் மற்றும் இயற்கை சீற்றங்களிடம் இருந்து தன்னை தன்னை சார்ந்தவர்களை உடமைகளை காத்து கொள்ள சுற்றுசூழலை அறிந்து புரிந்து உணர்ந்து சில விலங்குகளையும் தாவரங்களையும் தேர்ந்தெடுத்து பயன்படுத்த ஆரம்பித்தான். இந்த வழியில், ஆசியப்பனை(Borrasus Flabellifer) என அழைக்கபடும் கரும்பனைகள் நிறைய இருந்த இடங்களில் உள்ள மக்கள் பனையின் சிறப்பியல்புகளை அறிந்து, தங்கள் உயிர் உடமைகளை பாதுகாக்கும் சுற்று சுவராகவும், நிலங்களின் வரப்பு ஓரங்களில் உயிர் வேலியாகவும் பாதுகாப்பு அரணாகவும் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

தமிழரின் செழுமையான காதல் வாழ் வியலை பண்பாட்டை படம் பிடித்து காட்டும் சங்க இலக்கியமான குறுந்தொகை, கடற்கரை கானலில் பனைமரச்சோலைகள் இருப்பதையும் அச்சோலையில் உள்ள பனை மரங்களின் உச்சியிலுள்ள நெடிய கூரான கருக்குகளையுடைய மடல்கள் குருத்தோடு சேர்ந்து மறைந்து போகும்படி கடற்காற்று வீசுவதையும்(372), அக்கோடைக் காற்று மணலைக்கொண்டுவந்துமேவியதால்உயரமாய் வளர்ந்திருந்த பனைமரங்கள், குட்டைப் பானைகளாக காட்சியளிப்பதையும்(248) குறும்படமாக காட்டியுள்ளது. இதிலிருந்து உயர்ந்த வலிமைவாய்ந்த பனைகள் சூறாவளிக் காற்றையும் மணல் புயலையும் தாங்கி நின்றிருக்கிறது என்பது தெளிவாகிறது.





பனங்கருக்கு மட்டையாலான அழகிய வேலி (மூலம் முகநூல்)

**பனைத்தலைக் கருக்குடை நெடுமடல் குருத்தொடு மாய,**

**கடுவளி தொகுத்த நெடு வெண் குப்பைக்**

**கணம் கொள் சிமைய உணங்கும் கானல்,**

**ஆழி தலை வீசிய அயிர் சேற்று அருவிக்**

**கூழை பெய் எக்கர்க் குழீஇய பதுக்கை**

**புலர் பதம் கொள்ளா அளவை,**

**அலர் எழுந்தன்று, இவ் அழுங்கல் ஊரே**

**(கு தொ-372, விற்றூற்று மூதெயினனார்)**

**விளக்கம் :** பனை மரத்து உச்சியிலுள்ள கருக்குடைய நீண்ட ஓலையானது குருத்தோடு சேர்ந்து மறைந்து போகும்படி வீசும் கடும் காற்று அள்ளிக்குவித்த வெண்மையான மணற் குவியல்களையுடைய வருத்துகின்ற கடற்கரையிலே, கடல் எறிந்த சேற்றையுடைய அருவியால் குவியப்பெற்ற, கூந்தலுக்கு இடுகின்ற கருமணற் சேற்றுக் குவியல்கள், உலரும் பக்குவம் அடையாத கால அளவிலேயே இந்த ஆரவாரமிக்க ஊரில் அலர் எழுந்துவிட்டது.

குறிப்பு : தலைவன் தலைவியின் களவுக் காதல் ஊராரால் அறியப்பட்டு இவர்கள் மீது பலவாறு பழிச்சொல் பேசுவர் . இதுவே அலர் எனப்படும்.

**தில்லி எலிக்கு வான் பருந்து**

**தெற்குத் தினவின் படை மருந்து**

**கல்லாருக்கும் கலை விருந்து**

**கற்றவர்க்கும் வண்ணச் சிந்து!**

**சுரண்டுகின்ற வடக்கருக்கு**

**சூள் அறுக்கும் பனங்கருக்கு!**

**மருண்டு வாழும் தமிழருக்கு**

**வாழவைக்கும் அருட்பெருக்கு!**

**அவர்தாம் பெரியார்**

என்று கூரான பனங்கருக்குதனை, தாங்கள் உழைக்காமல், உழைக்கும் வர்க்க மக்களை ஜாதி/ மதம்/ வர்ண பேதம்/ கடவுள் கதை சொல்லி சுரண்டி அடிமைபடுத்திட முயன்ற வடக்கத்திய ஆரியரின் புரட்டல்/புளுகள் கதைகளை அறுத்தெறிய கூர்மையான பகுத்தறிவுவாள் கொண்டு போராடிய போராளியான பெரியார் என்று அன்போடு அழைக்கபடும் ஈ.வெ.ராமசாமியோடு ஒப்பிட்டு பாடியுள்ளார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். இப்படி கிட்டதட்ட மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே இன்றுவரை தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருக்கிறது பனை.

அதனால் தமிழகத்தை பொறுத்தவரையில், வேலிகள் பாதுகாப்பு சுவர்கள் அமைக்க ஏதுவாக விளங்கும் பல தாவரங்களில் சிறப்பு வாய்ந்தது நம் புவியியல் சூழலுக்கு ஏற்றதும், நீண்ட கூரான கருக்கு மட்டையோடு கூடிய விசிறி போன்ற ஓலைகளையுடையதும் நம் வாழ்வியல் பண்பாட்டோடு பின்னிப் பிணைந்த தமிழக அரசின் மரமுமான பனையாகும்.

பொதுவாக நம் வேளான் பண்பாட்டில் நிலங்களின் வரப்புகளின் ஓரத்தில் அடர்த்தியான நீண்ட வேலியாக அடுக்காக பனைமரங்கள் வளர்க்கபட்டன. இவை வேலியாக மட்டுமின்றி பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்தும் இடமாகவும் விளங்கின. ஏன் பனை மரம் உயிர் காத்தலில் உயிர் வேலியாக/ பாதுகாப்பு அரணாக /இடி தாங்கியாக விளங்குகிறது?

**தொடர்ச்சி அடுத்த இதழில்..**

# கொரோனா தடுப்பு மருந்து - காப்புரிமை என்ற மரண வணிகம் -

வழக்கறிஞர் பி.சுந்தரராஜன்

உலகத்தின் வல்லரசு நாடுகளையே மிரட்டிவரும் கொரோனா வைரஸுக்கு எதிராக சுமார் 10 தடுப்பு மருந்துகள் புழக்கத்தில் உள்ளன. மேலும் பல தடுப்பு மருந்துகள் ஆய்வு நிலையில் உள்ளன. இந்த தடுப்பு மருந்துகள் அனைத்தும் பெரும் பொருட்செலவில், ஆபத்து மிகுந்த சூழ்நிலையில் ஆய்வு செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்படுகின்றன.

எனவே இம்மருந்துகள் அனைத்தும் பேடன்ட் என்ற காப்புரிமையை பெறுகின்றன. இதன் விளைவாக இந்த பேடன்ட் காப்புரிமை பெற்ற நிறுவனங்களைத் தவிர மற்ற நிறுவனங்கள் இந்த தடுப்பு மருந்தை உற்பத்தி செய்ய முடியாது. எனவே இந்த தடுப்பு மருந்து பேடன்ட் காப்புரிமை பெற்ற சில மருந்து நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் சிக்கிவிடுகிறது. இதனால் ஏழை நாடுகள் இந்த தடுப்பை பெறமுடியாமல் அந்நாடுகளில் வசிக்கும் மக்கள் கொத்துக்கொத்தாக உயிரிழக்கும் அவலம் நிகழ்கிறது. போர்க்காலங்களிலும், பெருந்தொற்று நோய்க்காலங்களிலும் பேடன்ட் காப்புரிமையை தற்காலிகமாக ரத்து செய்ய வேண்டும் என்ற கருத்து பரவலாக விவாதிக்கப்படுகிறது. எனினும் இந்த கொரோனா பெருந்தொற்று காலத்தில் பல நாடுகளில் தடுப்பு மருந்துகள் எட்டாக்கனியாகவே உள்ளன.

இந்நிலையில் கொரோனா நோய் தடுப்பு மருந்துகளுக்கான பன்னாட்டு மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் பேடன்ட் உரிமையை தற்காலிகமாக ரத்து செய்ய வேண்டும் என்று இந்தியா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் உலக வர்த்தகக் கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. இதன் மூலம் பல ஏழை நாடுகள் இந்த கொரோனா நோய்த்தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்தோ, வாங்கியோ அந்த நாடுகளில் கொரோனா காரணமான உயிரிழப்புகளை தடுக்கமுடியும் என்று இந்நாடுகள் கூறுகின்றன. சுமார் 100 ஏழை மற்றும் வளர்ந்துவரும் நாடுகள்



இந்த கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன், ஸ்விட்சர்லாந்து, ஜப்பான், நார்வே, பிரேசில் உள்ளிட்ட நாடுகள், சில மருந்து நிறுவனங்கள், மைக்ரோசாப்ட் அதிபர் பில் கேட்ஸ் ஆகியோர் கொரோனா நோய்த்தடுப்பு மருந்துகளுக்கான பேடன்ட் உரிமையை ரத்து செய்யக்கூடாது என்று உரத்து குரல் எழுப்புகின்றனர். கொரோனா நோய்த்தடுப்பு மருந்தை கண்டுபிடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் செலவுகள் மிக அதிக அளவில் இருப்பதாலும், இது மிகவும் ஆபத்து மிகுந்த பணியாக இருப்பதாலும் அதற்கான வெகுமதி மிகவும் அவசியம் என்றும், பேடன்ட் காப்புரிமையை ரத்து செய்தால் புதிய மருந்துகளை கண்டுபிடிக்கும் பணியே நடைபெறாது என்றும் பேடன்ட் காப்புரிமை ஆதரவாளர்கள் கூறுகின்றனர். ஆனால் பேடன்ட் காப்புரிமை பெற்ற நிறுவனங்கள் கொள்ளை லாபம் ஈட்டுவதற்கும், அதன் முதலீட்டாளர்களுக்கு அதிக லாபத்தை வழங்குவதற்கும், அதன் மூலம் மிக அதிகளவில் முதலீட்டை திரட்டவுமே பேடன்ட் காப்புரிமை பயன்படுவதாக பேடன்ட் காப்புரிமை எதிர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தங்களின் கொள்ளை லாபவெறிக்காக சக மனிதர்கள் கொத்துக்கொத்தாக மரணம் அடைவதை நிறுவனங்களும், அதன் முதலீட்டாளர்களும் வேடிக்கைப் பார்ப்பதை அனுமதிக்கக்கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் பல மருந்துகள் பேடன்ட் காப்புரிமை பெற்றிருந்தாலும், வளரும் நாடுகளில் உள்ள பல மருந்து நிறுவனங்கள் அம்மருந்துகளை reverse engineering முறையில் தயாரித்துவிடும். இம்முறையில் பேடன்ட் காப்புரிமை பெற்ற மருந்தை தமது ஆய்வகங்களில் பகுத்தாராய்ந்து அதன் மூலப்பொருட்களை கண்டறிந்து அவற்றை வேறு முறைகளில் சேர்த்து நோய் தீர்க்கும் அம்மருந்தை ஏறக்குறைய தயாரித்து விடுவார்கள். ஆனால் அந்த முறை நோய்த் தடுப்பு மருந்துகளில் பயன்படாது. ஏனெனில் நோய் தீர்க்கும் மருந்துகள் உயிரற்ற வேதிப்பொருட்களை பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது. ஆனால் நோய்த்தடுப்பு மருந்துகள் வைரஸ் போன்ற நுண்ணுயிர்களை பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது. எனவே




அதன் உண்மையான கண்டுபிடிப்பாளர்களின் உதவியின்றி அந்த தடுப்பு மருந்தை மற்ற மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் reverse engineering முறையில் யாரும் நகலெடுக்க இயலாது.

ஆஸ்ட்ரா ஜெனிகா, நோவாக்ஸ், ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், காமாலியா ஆய்வு மையம் போன்ற பல பன்னாட்டு மருந்து உற்பத்தி நிறுவனங்கள் தங்களது கண்டுபிடிப்புகளான கொரோனா நோய்த்தடுப்பு மருந்துக்கான பேடன்ட் காப்புரிமையை (voluntary lincensing) இந்தியாவிலுள்ள சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா, பயாலஜிக்கல் ஈ, டாக்டர் ரெட்டிஸ் லாபரேட்டரீஸ் போன்ற இந்திய நிறுவனங்களுக்கு தாமாகவே முன்வந்து voluntary lincensing முறையில்வழங்கியுள்ளன. இதன் மூலம் லாப நோக்கமற்ற நியாயமான விலையில் ஏழை நாடுகள் அந்த மருந்து தயாரிப்பு நிறுவனங்களுடன் உரிய உடன்பாடு செய்துகொண்டு அந்த தடுப்பு மருந்தை தயாரித்தோ, வாங்கியோ பயன்படுத்தி தம் மக்களை பாதுகாக்க முடியும். அது சாத்தியமில்லாத தருணங்களில் ஒரு நாட்டின் அரசு தன்னாட்டில் மருந்து வணிகம் செய்யும் நிறுவனத்துடன் compulsory licensing முறையில் உடன்பாடு செய்ய முடியும். இதன் மூலம் அந்த மருந்து தயாரிப்பு நிறுவனத்திற்கு இழப்பீடாக ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்துவிட்டு அந்த தடுப்பு மருந்தை தமது நாட்டில் உள்ள நிறுவனங்கள் தயாரிக்க உரிமம் பெற இயலும்.

இந்தியாவில் முதற்கட்டமாக கோவிஷீல்ட், கோவாக்ஸின் என்று இரு தடுப்பு ஊசி மருந்துகள் புழக்கத்திற்கு வந்துள்ளன. கோவிஷீல்ட் தடுப்பு மருந்தை லண்டன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்ட்ரா ஜெனிகா தனியார் மருந்து தயாரிக்கும் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன. சிம்பன்சி வகை



மனிதக்குரங்கிடம் இருந்து எடுக்கப்பட்ட சாதாரண சளி தொடர்பான பாதிப்பை ஏற்படுத்தும் “அடினோ வைரஸ்” மூலம் இந்த கோவிஷீல்ட் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் சீரம் இன்ஸ்டிடியூட் என்ற தனியார் வணிக நிறுவனம் இதை தயாரிப்பதற்கான உரிமம் பெற்றுள்ளது.

கோவாக்ஸின் தடுப்பு மருந்தைஒன்றிய அரசு நிறுவனங்களான இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் இந்திய வைராலஜி நிறுவனம் ஆகியவற்றுடன் பாரத் பயோடெக் என்ற தனியார் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன. கொரோனா தொற்றுக்கு ஆளாகியவர்களிடம் இருந்து பெறப்பட்ட கொரோனா வைரஸ்களை செயலிழக்கச் செய்து செயலிழந்த அந்த வைரஸ்கள் மூலம் கோவாக்ஸின் தயாரிக்கப்படுகிறது.

கோவிஷீல்ட் தடுப்பு மருந்தின் பேடன்ட் காப்புரிமை ஆஸ்ட்ரா ஜெனிகா என்ற தனியார் நிறுவனத்திடம் இருக்கிறது. அந்த நிறுவனம் இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் அவசர மருத்துவத்தேவைக்காக கோவிஷீல்ட் தடுப்பு மருந்தை தயாரிப்பதற்கான பேடன்ட் காப்புரிமையை voluntary licensing முறையில் வழங்குவதாக கூறியுள்ளது.பொதுவாக voluntary licensing முறையில் மருந்தை கண்டுபிடித்து, தயாரிப்பதற்கான செலவுத் தொகை மட்டும் லாபம் ஏதுமில்லாமல் வழங்கப்படுகிறது. ஆஸ்ட்ரா ஜெனிகா நிறுவனத்திற்கும், சீரம் இன்ஸ்டிடியூட் நிறுவனத்திற்கும் இடையேயான ஒப்பந்தம் என்னவென்று பொதுவெளியில் செய்தி ஏதுமில்லை. எனினும் ஆஸ்ட்ரா ஜெனிகா நிறுவனம் சார்பில் இந்தியா போன்ற நாடுகளுக்கு கோவிஷீல்ட் மருந்தை தயாரிப்பதற்கான அனுமதியை வழங்குவதாக தாமாகவே அறிவித்துள்ள நிலையில், இந்தியாவில் கோவிஷீல்ட் தடுப்பு மருந்தை தயாரிக்கும் சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா நிறுவனம் பேடன்ட் லாப நோக்கோடு கூடிய காப்புரிமைத் தொகையை செலுத்தவில்லை என்பது உறுதியாகிறது.

இந்தியாவின் சொந்தத் தயாரிப்பான “கோவாக்ஸின்” தடுப்பு மருந்து இந்திய அரசு நிறுவனங்களான இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் இந்திய வைராலஜி நிறுவனம் ஆகியவற்றுடன் பாரத் பயோடெக் என்ற தனியார் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன. இந்த நிறுவனங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்கள் இதுவரை பொதுவெளியில் கிடைக்கப்பெறவில்லை. இந்த கோவாக்ஸின் தடுப்பு மருந்தை தயாரிப்பதற்கான முயற்சியில் இந்திய அரசு நிறுவனங்களின் பங்களிப்பு என்ன? பாரத் பயோடெக் நிறுவனத்தின் முதலீடு எவ்வளவு? கோவாக்ஸின் மருந்தின் பேடன்ட் காப்புரிமை யாரிடம் இருக்கிறது? போன்ற எந்த கேள்விக்கும் பொதுவெளியில் பதில் இல்லை. தகவல் உரிமைச் சட்ட ஆர்வலர்கள் சிலர் இந்தத் தகவலை பெறுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியைத் தழுவின. அரசு நிறுவனங்களும் இந்த தகவல்களை வழங்குவதற்கு மறுத்து வருகின்றன.

கோவிஷீல்ட் தடுப்பு மருந்தை கண்டு பிடிப்பதில் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் பங்களித்திருக்கிறது என்று பார்த்தோம். ஆனால் அந்த கோவிஷீல்ட் தடுப்பு மருந்திற்கான பேடன்ட் காப்புரிமை ஆஸ்ட்ரா ஜெனிகா என்ற தனியார் நிறுவனத்திடம் உள்ளது. இதற்கு இங்கிலாந்தில் பெரும் எதிர்ப்பு எழுந்துள்ளது. பொதுமக்கள் வரிப்பணத்தில் இயங்கும் ஒரு பல்கலைக்கழகத்தின் கூட்டுமுயற்சியில் உருவான கோவிஷீல்ட் தடுப்பு மருந்தின் பேடன்ட் காப்புரிமையை ஆஸ்ட்ரா ஜெனிகா என்ற தனியார் வணிக நிறுவனத்திற்கு கொடுத்ததற்கு இங்கிலாந்து மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அதை சமாளிக்கும் விதத்திலேயே இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகளுக்கு ஆஸ்ட்ரா ஜெனிகா நிறுவனம் பேடன்ட் காப்புரிமையை voluntary lincensing முறையில் வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவிலும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், இந்திய வைராலஜி நிறுவனம் ஆகியவை ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு நிறுவனங்களாகும். இந்த அரசு நிறுவனங்கள் முழுமையாக மக்களின் வரிப்பணத்தில்தான் இயங்குகின்றன. இந்த அரசு நிறுவனங்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில்தான் கோவாக்ஸின் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. எனவே இதன் பேடன்ட் காப்புரிமையில் இந்திய அரசுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் உரிய பங்கு இருக்க வேண்டும். ஆனால் இதுகுறித்த தகவல்களை ஒன்றிய அரசு மறைக்கிறது. மேலும் இந்த




கோவாக்ஸின் மருந்தின் விலையை நிர்ணயம் செய்வதிலும் அரசுக்கோ, ஆய்வுகளில் பங்கேற்ற அரசுத்துறைகளுக்கோ என்ன அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவில்லை. கோவாக்ஸின் தடுப்பு மருந்தின் விலைநிர்ணயம் குறித்த விபரங்களை பாரத் பயோடெக் நிறுவனம் மட்டுமே வெளியிடுகிறது.

பன்னாட்டு நிறுவனங்களின் கொரோனா தடுப்பு மருந்திற்கான பேடன்ட் காப்புரிமையை தற்காலிகமாக ரத்து செய்ய வேண்டும் என்று உலக வர்த்தகக் கழகத்திடம் கோரிக்கை விடுக்கும் இந்திய அரசு, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கோவாக்ஸின் தடுப்பு மருந்தின் பேடன்ட் காப்புரிமை குறித்த தகவல்களைக்கூட கொடுக்க மறுப்பது இந்திய அரசின் இரட்டை நிலையை காட்டுகிறது. மேலும் இந்த தடுப்பு மருந்தை தயாரிக்க பல நிறுவனங்கள் தயாராக உள்ள நிலையில் பாரத் பயோடெக் நிறுவனத்திற்கு மட்டும் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதும் பல்வேறு ஐயங்களை எழுப்பியுள்ளது. இந்த பாரத் பயோடெக் நிறுவனம் வெளிநாடுகளுக்கும் கோவாக்ஸின் தடுப்பு மருந்தை ஏற்றுமதி செய்து வருகிறது. இந்திய மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் ஒன்றிய அரசு அமைப்புகளான இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், இந்திய வைராலஜி நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் பங்களிப்புடன் நடைபெற்ற ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட கோவாக்ஸின் தடுப்பு மருந்தை பாரத் பயோடெக் என்ற ஒற்றைத் தனியார் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் பிரதமர் மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி அரசு ஒப்படைத்தது சர்வதேச அளவில் பெரும் விவாதங்களை எழுப்பியுள்ளது.

பன்னாட்டு நிறுவனங்களின் பேடன்ட் காப்புரிமையை தற்காலிகமாக ரத்து செய்து கொரோனா தடுப்பு மருந்து அனைத்து நாடுகளுக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று உலக வர்த்தக கழகத்திடம் வலியுறுத்தும் மோடி தலைமையிலான இந்திய அரசு, அதற்கு முன்மாதிரியாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கோவாக்ஸின் மருந்தின் பேடன்ட் காப்புரிமையை நாட்டுடைமையாக்கி இலவசமாக இந்திய மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கிறது. இந்தியாவில் உள்ள பெரும்பகுதியினரான ஏழைகள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிருக்கு பரிதவித்துக் கொண்டிருக்கும் நிலையில் பேடன்ட் காப்புரிமை என்ற மரண வணிகத்தை இந்திய அரசு கைவிட வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் நியாயமானதே! ●

வே.நி.சூர்யா

# உன் பாதை

ஒவ்வொரு இலையும்
ஓர் உலகமன்றி வேறென்ன
நீ சஞ்சலப்படுவதும்
பின் சஞ்சாரம் செய்வதும் எதற்காக
சூரியப் பிரபையில்
தலையாட்டி பொம்மை போலாடும் மரகதப்பச்சையைப் பார்
எகிறிக்குதி அதனுள்
நீண்டு செல்லும் நரம்புகளே உன் பாதை
தொடர்ந்து போ அதனூடே
கிளைகள் மலைகள்
ஏறு உன் காற்றுப்பைக்கு முகில் காட்டியவாறு
அழற்கதிரெனும் மஞ்சள் குதிரையேறி
சூரியனைக் கடந்து சென்றுவிடு
என்ன ஆயினும்
நூறாயிரம் இருள் உன் சித்த அம்பரத்தில் கவிந்தாலும்
இலைகளிருக்கின்றன உனக்கு
இன்னும் ஏன் நின்றுகொண்டிருக்கிறாய்
அதோ பச்சை வண்ணம் உன்னை அழைக்கிறது பார்
போ...



ஒரு ஊரில் ஒரு வெள்ளாட்டுக்குட்டி இருந்தது. அது பிறந்தபோது எடுத்துக் கைக்குள் அடக்கிவிடுகிற மாதிரி மிகச் சிறிதாக இருந்தது. அதைப் பார்த்த பெண்ணொருத்தி 'இதென்ன பூனக் குட்டியாட்டம் இருக்குது' என்று சொன்னாள். அதுமுதல் 'பூனாச்சி' என்பதே அக்குட்டியின் பெயராயிற்று. பூனாச்சிக்கு ஓரிடத்தில் இருக்கப் பிடிக்காது. எப்போதும் எங்காவது திரிந்துக்கொண்டே இருக்க வேண்டும். தினமும் புதுப்புது இடங்களைக் கண்டுபிடித்து அங்கே போய் விளையாடி வருவதில் அப்படி ஒரு மகிழ்ச்சி.

ஒருநாள் தனக்கு விருப்பமான தழைகளைத் தேடி மேய்ந்துகொண்டே போனாள் பூனாச்சி. கடும்பசி வேறு. மேய்ச்சல் மும்மரத்தில் எங்கே போகிறோம், எப்படிப் போகிறோம் என்பதே அவளுக்குத் தெரியவில்லை. ஒரு புதருக்குள்

# ரகசிய வீடு

**கதை - பெருமாள் முருகன், ஓவியம் - அ.முரளி**



நுழைவதற்குச் சிறிய வழிதான் இருந்தது. மண்டியிட்டு உள்ளே பார்த்தாள். நல்ல புற்களும் தழைகளும் அவளை வாவென்று அழைத்தன. அப்படியே நகர்ந்து உள்ளே போய் விட்டாள். இதுவரைக்கும் யார் கண்ணுக்கும் படாத சுவையான மேய்ச்சல். வயிறு நிரம்ப மேய்ந்தாள். புதருக்குள் குறுமரங்கள், செடிகள் நிறைந்திருந்தன. மேலே குடை போலக் கொடிகள் படர்ந்திருந்தன. நல்ல குளுமை. அதேசமயம் அடர்ந்த நிழலுக்குள் மெலிதான வெளிச்சமும் இருந்தது. வயிறு நிறைந்ததால் பூனாச்சிக்குத் தூக்கக் கிறக்கம். புல் மெத்தை ஒன்றில் கால்களை மடக்கிப் படுத்துத் தன் உடல்மேல் தலையைப் போட்டுக்கொண்டு சுகமாகத் தூங்கினாள்.

திடுமென எழுந்து பார்த்தபோது ஓசையற்ற அந்த இடம் அவளுக்கு அச்சத்தைக் கொடுத்தது. மேய்ச்சல் மும்மரத்தில் இப்படி வந்து மாட்டிக்கொண்டோமே என்று நினைத்தாள். வெளியே போக எந்தப் பக்கம் வழி இருக்கிறது என்று பார்த்தாள். அப்போது எதிரே கொஞ்ச தூரத்தில் இரண்டு கண்கள் அவளையே வெறிப்பது தெரிந்தது. சட்டெனப் பயந்து போனாள். சுதாரித்துக்கொண்டு பார்க்கையில் அந்தக் கண்களில் அச்சமும் சோகமும் படர்ந்திருப்பதை உணர்ந்தாள். அது ஒரு முயல். முயலுக்கும் பூனாச்சிக்கும் பத்தடி தூரம் இருக்கும். பூனாச்சி எழுந்தால் உடனே ஓடிவிடத் தயாராக இருப்பது போல முயலின் காதுகள் விறைத்தும் கால்கள் துள்ளியும் நின்றிருந்தன.

முயலைப் பயமுறுத்தி விளையாடலாமா என்று பூனாச்சி முதலில் நினைத்தாள். புதருக்குள் பேச்சுத்துணைக்கு ஓர் ஆள் கிடைத்திருப்பதே பெரிய விஷயம் என்று தோன்றவும் பேச்சைத் தொடங்கினாள்.

'முயலண்ணா முயலண்ணா, என்னயப் பாத்து உனக்குப் பயமா இருக்குதா?'

முயலுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அடக்க முடியாமல் கொஞ்சம் சிரித்துவிட்டு 'என்னயப் பாத்தா அண்ணனாட்டாமா தெரீது? நான் அக்கா' என்றது.

'உங்க முயலினத்துல பாத்ததியும் ஆணா பொண்ணான்னு கண்டுபுடிக்க எனக்குத் தெரியாது. செரி, இன்னமே உன்னய

அக்கான்னே கூப்பிடறன்' என்றாள் பூனாச்சி.

'செரி பெரிய்ய தங்கச்சி' என்று முயல் மீண்டும் சிரித்தது. இது குசும்பு பிடித்த முயல் என்று பூனாச்சிக்குத் தோன்றியது. ஆனாலும் மேலே பேசினாள்.

'செரி, என்னயக் கண்டு எதுக்குப் பயப்படற?' என்று மீண்டும் கேட்டாள் பூனாச்சி.

'உன்னயக் கண்டு எதுக்கு நான் பயப்படோணும்? நீயும் என்னய மாதிரி புல்ல மேஞ்சுக்கிட்டு, எல தழயத் தின்னுக்கிட்டு வாழ்ற ஜீவன்தான?' என்றது முயல் தைரியத்துடன்.

'அது செரி, எனக்குக் கொம்பு இருக்குதே. உன்னய முட்ட மாட்டனா?' எனத் தன் சிறுகொம்பை ஆட்டிக் காட்டியபடி பூனாச்சி கேட்டாள்.

உடனே முயல் 'முட்ட உனக்குக் கொம்பிருந்தா ஓட எனக்குக் காலிருக்குதே' என்று பூனாச்சி கேட்ட தொனியிலேயே பதில் பேசியது.

'அப்ப செரி. ஆனா ஏன் பயப்படற?' என்றாள் பூனாச்சி.

'எனக்கென்ன பயம்?' என்றது முயல் வீராப்புடன்.

'உன் வாய் சொல்லுது, ஆனா கண்ணுல பயம் தெரீதே' என்றாள் பூனாச்சி.

'என்னோட கண்ணு எப்பவுமே அப்படித்தான் தெரியும். ஆனாலும் ஒரு பயமும் இருக்குது. இது வேற பயம்' என்ற முயல் புதருக்கு வெளியே பார்த்தது.

'அதென்ன வேற பயம்?'

'இந்தப் புதருதான் என்னோட வீடு. இதுக்குள்ள இதுவரைக்கும் என்னயத் தவிர யாருமே நொழஞ்சதில்ல. இப்ப நீ வந்திட்டயே, அதுதான் பயம்.'

'நான் என்ன செய்யப் போறன்? எம்பாட்டுக்கு மேஞ்சுட்டுப் போய்க்கிட்டே இருக்கறன். நீ உம்பாட்டுக்கு இரு.'

பூனாச்சியின் ஆறுதல் முயலுக்குப் போதவில்லை.

'நீ உம்பாட்டுக்குப் போய்ச் சும்மா இருப்பியா? உன்னோட கூட்டத்துக்கிட்ட இப்படி ஒரு எடத்தப் பாத்தன்னு சொல்லுவ.



அப்பறம் கூட்டிக்கிட்டு வந்து காட்டுவ. உங்களத் தேடிக்கிட்டு மேய்க்கறவன் வருவான். அவன் வந்தா சும்மா இருப்பானா? ஆகா, உள்ள ஒரு முயலோட கால் தடம் தெரீதேன்னு கண்டுபுடிப்பான். எப்படி இதப் புடிக்கலான்னும் யோசிப்பான். ஒரு பெரிய வலயக் கொண்டாந்து கண்ணுக்குத் தெரியாதபடி போட்டு வெப்பான். அப்பறம் நான் மாட்டிக்கிட்டுச் சாக வேண்டீதுதான்.'

முயல் கவலை தோய்ந்த குரலில் சொல்லிற்று. யாருக்கும் தெரியாத ரகசிய வீடு அல்லவா அது? அதன் கவலையில் நியாயம் இருப்பதாகப் பூனாச்சிக்கும் தோன்றியது.

'ஆமாமா. மனுசனுக்குத்தான் நாம ரொம்பப் பயப்படணும். ஆனா நீ கவலப்படாத. நான் இந்த எடத்த ஒருத்தருக்கும் சொல்லல. நானுமே கூட இன்னமே இங்க வர்ல. நீ சந்தோசமா உன்னோட வீட்ல இரு' என்று பூனாச்சி சொன்னாள்.

'செரி தங்கச்சி. உன்னய நம்பறன். அப்பப்ப இங்க வந்து மேஞ்சுட்டு எங்கிட்ட நாலு வார்த்த பேசீட்டுப் போ. எனக்கும் உன்னயப் புடிக்குது' என்றது முயல்.

அந்த இடத்திலிருந்து எழுந்தாள் பூனாச்சி. உடனே முயல் வேகமாகப் புதருக்குள்ளிருந்து வெளியே ஓடச் சில அடிகள் எடுத்து வைத்தது.

'ஏன் ஓடற?' எனப் பூனாச்சி கேட்டாள்.

'அது பழக்க தோஷம்' என்று அதே இடத்தில் நின்றபடி முயல் சொல்லிச் சிரித்தது.

●

# வர்ணச்சேவல்

கதை - வி. ஸுத்யேயெவ், தமிழில் - யூமா வாசுகி,
ஓவியம் - சொக்கலிங்கம்



கொக்...கொக்...கொக்... என்று நடந்து கொண்டிருந்தது சேவல்.

எங்கு செல்ல வேண்டும் என்று அதற்கு எந்த இலக்கும் இல்லை. காலையில் கொஞ்சம் தூரம் எங்காவது செல்ல வேண்டும். பிறகு கூட்டுக்குத் திரும்ப வேண்டும். அவ்வளவுதான்.

அந்தப் பிரதேசத்தில் அதைத் தவிர வேறொரு சேவல் இல்லை. தன்னைத் தவிர வேறொரு சேவலை அது பார்த்ததும் இல்லை. எல்லா சேவல்களும் தன்னைப் போன்றுதான் இருக்கும் என்று அது நம்பிக்கொண்டிருந்தது.

கொஞ்சம் தூரம் சென்ற பிறகு ஒரு நாய்க்குட்டி எதிரே வந்தது.

அந்த நாய்க்குட்டியை உற்றுப் பார்த்தது சேவல்.

அட, இந்த நாய்க்குட்டி எவ்வளவு அழகாக இருக்கிறது!

பஞ்சுபோன்ற உடல், குட்டிக் கால்களும் வாலும், உருண்டைக் கண்கள் இரண்டு.

சேவல் இன்னொரு விஷயத்தையும் கவனித்தது. நாய்க் குட்டியின் உடலில் பல நிறங்கள் இருந்தன.

வெள்ளை, மஞ்சள், தவிட்டு நிறப் புள்ளிகள், கருப்பு நிற சிறிய மூக்கு.

நாய்க்குட்டி சேவலை நலம் விசாரித்தது:

“சேவல் அண்ணே, எங்கே செல்கிறீர்கள்?”

“எங்குமில்லை தம்பி. சும்மா கொஞ்சம் நடப்பதற்கு...” என்று சொன்ன சேவல் மண்ணைக் கொஞ்சம் கிளறியது.

நாய்க்குட்டி கேட்டது:

“சேவல் அண்ணே, உங்கள் உடல் வெள்ளையாக இருக்கிறதே, மற்ற சேவல்களைப்போல நீங்கள் ஏன் உடலில் சாயம் தேய்க்கவில்லை?”

சேவலுக்கு நம்பிக்கை வரவில்லை:

“நீ என்ன சொல்கிறாய் தம்பி? மற்ற சேவல்களுக்குப் பல நிறங்கள் இருக்கின்றனவா?”

நாய்க்குட்டி விளக்கமாகச் சொன்னது:

“அப்புறம் என்ன? நீங்கள் ஒவ்வொரு சேவலையும் பக்கத்தில் சென்று பார்க்க வேண்டுமே! எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா? கொண்டைக்கும் தாடைக்கும் ஒரு நிறம், வாலுக்கு வேறொரு நிறம், சிறகுகளுக்குத் தனி நிறம் என்றால் கழுத்துக்கு இவற்றைவிட நல்ல நிறம். எல்லா நிறமும் சேரும்போது எவ்வளவு அழகு தெரியுமா? அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.”

சேவல் பக்கத்தில் உள்ள வாய்க்கால் கரையில் நின்று தண்ணீரைப் பார்த்தது. தெளிவான தண்ணீரில் அதன் உருவம் தெரிந்தது! அப்போது தன்னையே அதற்குப் பிடிக்கவில்லை. அது வருத்தப்பட்டது:

“ஐயோ, நான் ஏன்தான் இவ்வளவு அசிங்கமாக இருக்கிறேன் என்று தெரியவில்லையே?”

அதைகேட்ட நாய்க்குட்டிக்கு சேவலின் மீது இரக்கம் ஏற்பட்டது. அது கேட்டது:

“சேவல் அண்ணே, வெள்ளைச் சேவலான உங்களுக்கு மற்ற சேவல்களைப்போல வர்ணச் சேவலாக வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறதா?”

சேவல் அவசரமாகச் சொன்னது:

“ஆமாம், ஆமாம். எல்லோரும் பார்த்து ரசிக்கும்படியான வர்ணச் சேவலாக உடனே நான் மாற வேண்டும். அதற்கு என்ன வழி?”

“இங்கே பக்கத்தில்தான் நிறங்களின் அரண்மனை இருக்கிறது. நீங்கள் அங்கே சென்று

நிறங்களுக்குப் பக்கத்தில் நின்றால் போதும். மற்றதை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்." நிறங்களின் அரண்மனைக்குச் செல்வதற்கு வழிகாட்டியது நாய்க்குட்டி.

"நீ செய்த இந்த உதவியை நான் எப்போதும் மறக்க மாட்டேன் தம்பி" என்று சொன்ன சேவல் நிறங்களின் அரண்மனையை நோக்கி நடந்தது.

சற்றுத் தொலைவு நடந்து திரும்பிய பிறகு நிறங்களின் அரண்மனை தெரிந்தது!

சேவல் வியப்பால் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டது.

அந்த அரண்மனையின் சுவர்கள் பல நிறங்களில் இருந்தன. சன்னலுக்கும் கதவுக்கும் வெவ்வேறு நிறம், மேற்கூரைக்குத் தனி நிறம், அரண்மனையின் நுழைவாயிலுக்கோ தங்க நிறம்.

சேவல் தைரியமாக உள்ளே நுழைந்தது. யாரும் அதைத் தடுக்கவில்லை.

சேவல் கதவைத் தள்ளித் திறந்து உள்ளறைக்குச் சென்றதும், அங்கே எண்ணற்ற நிறங்கள் இருந்தன!

நிறத் தட்டுகளும் நிறக் கோல்களும் வைத்துக் கொண்டு நிற மனிதர்கள் நின்றிருந்தார்கள்.

பச்சை, மஞ்சள், நீலம்!

சிவப்பு, கருப்பு, வெள்ளை!

சம்பல் நிறம், தவிட்டு நிறம், ஊதா!

மயில் பீலி நீலம், இலைப் பச்சை!

வான வில்லின் ஏழு நிறங்கள்!

நிற மனிதர்கள் சேவலிடம் கேட்டார்கள்:

"உம், என்ன வேண்டும்?"

சேவல் மிகவும் பணிவுடன் சொன்னது:

"எனக்கு நிறம் இல்லாத காரணத்தால் என்னை யாரும் கவனிப்பதில்லை. தயவு செய்து என் உடலில் சாயங்கள் தடவி என்னை வர்ணச் சேவலாக மாற்ற வேண்டும்!"

நிற மனிதர்கள் உறுதியளித்தார்கள்:

"அதற்கென்ன, நாங்கள் இப்போதே உன்னை அழகாக்கி விடுகிறோம்."

அவர்கள் சேவலை சிவப்புக் கம்பளத்தில் நிறுத்தினார்கள். சேவலை நன்றாக உற்றுக் கவனித்த பிறகு சிவப்பு நிறம், நிறக்கோலுடன் பக்கத்தில் வந்து சொன்னது:

"உன் கொண்டைக்கும் தாடைக்கும் நான் பொருத்தமாக இருப்பேன்."

அடுத்த நொடியே அந்தப் பகுதிகளில் சிவப்பு நிறம் படிந்தது.

பிறகு வந்தது நீல நிறம். அது சேவலின் நீளமான பின் பகுதி இறகுகளில் படிந்து, "உன் பின் இறகுகளுக்கு ஏற்ற நிறம் நான்தான்!" என்றது.

சேவலின் வால் நீல நிறமான பிறகு பச்சை நிறம், வந்தது. சில நொடிகளுக்குள் சேவலின் இறக்கைகளெல்லாம் பச்சை நிறமாயின!

தான் வாய்ப்பிற்காகக் காத்திருந்த மஞ்சள் நிறம், சேவலின் கழுத்துப் பகுதியில் படிந்தது.

கடைசியில் நிறங்களெல்லாம் சேவலுக்குச் சுற்றிலும் நின்று மகிழ்ச்சியாகக் கூறின:

"இப்போது உன்னை யார் பார்த்தாலும் உன் அழகைக் கண்டு மிகவும் வியந்துபோவார்கள் நண்பனே!"

சேவல், நிறங்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்து விடைபெற்றது. நிறங்களின் அரண்மனையை விட்டுப் புறப்பட்டது.

வழியிடையில் இருந்த வாய்க்கால் நீரில் அது தன் அழகைப் பார்த்துக்கொண்டது.

கொண்டையும் தாடியும் ரத்தச் சிவப்பு.

வால் பகுதி இறகுகள் அடர்ந்த நீலம்.

இரு பக்க இறக்கைகளும் பச்சை.

கழுத்தில் ஒளிரும் மஞ்சள் நிறம்!

சேவலின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. தன் அழகை எல்லோருக்கும் அறிவிப்பதற்காக அது நீட்டிக் கூவியது!

"கொக்கரக்கோ...!"

அதைக் கேட்டு நாய்க்குட்டி சேவலிடம் வந்தது.

சேவல் நிமிர்ந்து நின்று பெருமையுடன் நாய்க் குட்டியிடம் கேட்டது:

"நான் இப்போது எப்படியிருக்கிறேன்!"

"இப்போதா..." என்ற நாய்க்குட்டி சேவலைக் கவனமாகப் பார்த்துவிட்டுச் சொன்னது:

"...இப்போதுதான் நீங்கள் உண்மையாகவே வர்ணச் சேவலாக இருக்கிறீர்கள் அண்ணே!

மகிழ்ச்சியுடன் சேவல் மீண்டும் கூவியது:

"கொக்கரக்கோ...!"

●

# தென்னமெரிக்க நாட்டுப்புறக் கதைகள்

## வம்புக்காரக் குரங்கன்

மரம் ஒன்றின்மேல் அமர்ந்திருந்த அந்தக் குரங்கு, கிடார்—ஐ இசைத்தபடி பாடிக்கொண்டிருந்தது. அங்கு வந்த ஒரு புலி மரத்தடியில் படுத்து ஓய்வெடுக்கத் தொடங்கியது. அதைச் சீண்டிப்பார்க்க நினைத்த குரங்கு, ஒரு பாட்டெடுத்துப் பாடியது.

“நான் ஒரு வீரன்.

ஈடு இணையற்ற சூரன்.

இது புலி எலும்பில் செய்த கிடார்.

யாரும் என்னிடம் விடமுடியாது உதார்.

ஹாஹஹா! ஹோஹஹோ!”

இதைக்கேட்டதும் புலி துள்ளி எழுந்து, “தம்பி குரங்கா, நீ என் கையில் சிக்காதவரைக்கும் என்ன வேண்டுமானாலும் பாடிக்கொள். சிக்கினாய் என்றால் உன் எலும்பை எண்ணிவிடுவேன்.” என்று கோபமாகச் சொன்னது.

குரங்கு அருகில் இருந்த இன்னொரு மரத்திற்குத் தாவி மறைந்துகொண்டது. சற்று நேரம் கழித்து கீழே இறங்கிய அது அங்கிருந்த ஒரு பொந்திற்குள் சென்று ஒளிந்துகொண்டு, மீண்டும் தன் பாட்டைப் பாடியது.

“நான் ஒரு வீரன்.

ஈடு இணையற்ற சூரன்.

இது புலி எலும்பில் செய்த கிடார்.

யாரும் என்னிடம் விடமுடியாது உதார்.

ஹாஹஹா! ஹோஹஹோ!”

இதைக்கேட்டுப் பாய்ந்து வந்த புலி குரங்கின் காலைப் பிடித்துவிட்டது.

“ஏய் புலியே! நீ என்னுடைய காலைப் பிடித்திருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். உண்மையில் நீ பிடித்துக் கொண்டிருப்பது ஒரு மரக்கட்டையை. ஹாஹஹா!” என்று கத்தியது குரங்கு.

அது சொல்வதை நம்பிய புலி தன்னுடைய பிடியை விட்டுவிட, இதுதான் சமயம் என்று கருதிய குரங்கு இன்னும் சற்றுதூரம் பொந்திற்குள் நகர்ந்து சென்றுவிட்டது.

“புலியே! நீ உண்மையிலேயே என் காலைத்தான் பிடித்திருந்தாய். அந்தப் பிடியை விட்டுவிட்டதற்கு நன்றி.” என்றபடி மறுபடியும் பாடத் தொடங்கியது.

“நான் ஒரு வீரன்.

ஈடு இணையற்ற சூரன்.

இது புலி எலும்பில் செய்த கிடார்.

யாரும் என்னிடம் விடமுடியாது உதார்.

ஹாஹஹா! ஹோஹஹோ!”

கடுப்பான புலி மீண்டும் தன் முன்னங்காலை பொந்திற்குள்விட்டுத் துலாவியது. ஆனால் குரங்கு அதனிடம் சிக்கவில்லை. ‘எப்படியும் குரங்கன் வெளியே வந்துதானே ஆகவேண்டும்.’ என்று எண்ணிய அது அங்கேயே படுத்துவிட்டது. குரங்கோ பொந்தின் இன்னொரு முனையின் வழியே வெளியேறிப்போய் அங்கிருந்த மரமொன்றின்மேல் ஏறி அமர்ந்துகொண்டு கிடாரை இசைத்தபடி மீண்டும் பாடத் தொடங்கியது.

“நான் ஒரு வீரன்.

ஈடு இணையற்ற சூரன்.

இது புலி எலும்பில் செய்த கிடார்.

யாரும் என்னிடம் விடமுடியாது உதார்.

ஹாஹஹா! ஹோஹஹோ!”

இதைக்கேட்ட புலி, ‘குரங்கை எப்படிப் பழிவாங்கலாம்’ என்ற யோசனையில் ஆழ்ந்தது. அப்போது தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்து ஆடிக்கொண்டிருந்ததால், காட்டில் உள்ள விலங்குகள் எல்லாம் அங்கிருந்த ஒரு குளத்தில்தான் நீர் அருந்தி வந்தன. ‘தாகம் எடுத்தால் குரங்கு அந்தக் குளத்திற்குத்தானே வந்தாக வேண்டும்’ என்று நினைத்த புலி குளக்கரையை வந்தடைந்தது.

அது நினைத்ததைப்போலவே சிறிது நேரத்தில் குரங்கு அங்கே வந்தது. ஆனால் தனக்காகப் புலி

காத்திருப்பதைக் கண்டதும் அது ஓடிப்போய் மரத்தின்மேல் ஏறிக்கொண்டது.

‘எவ்வளவு நேரம் அது தாகத்துடன் அங்கே அமர்ந்திருக்க முடியும்?’

அது அங்கிருந்து கிளம்பி, தட்டுத்தடுமாறி நடந்து காட்டோரம் இருந்த பாதையின் நடுவே வந்து மூச்சுவிடாமல் படுத்துகொண்டது. அவ்வழியே சென்ற ஒரு மூதாட்டி, “இந்தக் குரங்கு இறந்துபோய்க் கிடக்கிறதே. இதை வீட்டிற்கு எடுத்துச் செல்வோம்.” என்றபடி அதைத்தூக்கித் தன் தலைமேல் இருந்த கூடைக்குள் போட்டார். சிறிது நேரத்தில் குரங்கு அந்தக் கூடைக்குள் இருந்த தேனை எடுத்துக் குடித்ததோடு, அதைத் தன் உடல் முழுவதும் பூசிக்கொண்டு வெளியே தாவிக்குதித்து ஓடிவிட்டது.

அந்த மூதாட்டி தன் வீட்டை அடைந்ததும், கூடையை இறக்கிப் பார்த்தார். அங்கே குரங்கைக் காணோம். அதோடு, அவர் கஷ்டப்பட்டுக் கொண்டுவந்த தேனில் பாதியையும் காணோம். “குரங்கு தன் குறுக்கு புத்தியைக் காட்டிவிட்டதே.” என்றபடி அவர் தலைமேல் கைவைத்துச் சோகமாக அமர்ந்துவிட்டார்.

இதற்கிடையே, குரங்கு மரத்திற்கு மரம் தாவியபடி குளத்தை நோக்கிப் போனது. அதன் உடல் முழுவதும் பச்சை இலைகள், மரப்பட்டைகள் எல்லாம் ஒட்டிக்கொண்டிருந்தன. தன் தாய்கூடத் தன்னை அடையாளம் கண்டுகொள்ள முடியாது என்று நினைத்த அது, தைரியமாகக் குளத்திற்குள் இறங்கியது. கரையில் இதற்காகவே காத்திருந்த புலியால்கூடக் குரங்கை அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை.

வேண்டிய மட்டும் தண்ணீர் அருந்திய குரங்கு, தன்னை மறந்து சில நிமிடங்கள் அங்கேயே அமர்ந்திருந்தது. அதற்குள் அதன் மேல் ஒட்டியிருந்த இலைகள் எல்லாம் உதிர்ந்துவிட்டன. இப்போது புலி அதை அடையாளம் கண்டுகொண்டு துரத்த, குரங்கு உயிரைக் கையில் பிடித்தபடி ஓடித்தப்பியது.

குரங்கிற்கு மறுபடி தாகம் எடுத்தபோது, குளத்தருகே தனக்காகக் காத்திருக்கும் புலியின் உருவம்தான் அதன் மனக்கண்ணில் தோன்றியது. சிறிது யோசனைக்குப்பின், அங்கிருந்த மரம் ஒன்றில் வடிந்துகொண்டிருந்த



பிசினை எடுத்துத் தன் உடல் முழுவதும் பூசிக்கொண்டு கீழே விழுந்து புரண்டது. காய்ந்த இலைதளைகள் அதன் உடல் முழுவதும் ஒட்டிக்கொண்டன.

அதே கோலத்தில் அது மீண்டும் குளக்கரைக்குப் போனது. குப்பையும் கூளமுமாக அது செல்வதைக்கண்ட புலி, ‘வேறேதோ ஒரு விலங்கு போகிறது’ என்று நினைத்து அமைதியாக இருந்துவிட்டது. பொறுமையாகத் தண்ணீர் அருந்திய குரங்கு அங்கேயே சிறிது நேரம் ஓய்வெடுத்தது. மரப்பிசின்மேல் ஒட்டியிருந்த இலைகள் உதிரவில்லை என்பதால், புலியும் அதை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. குரங்கு அவசரப்படாமல் நிதானமாக அங்கிருந்து கிளம்பித் தன் இருப்பிடத்தை அடைந்தது.

அதன்பிறகு அந்தக் குரங்கு இதே வழிமுறையைக் கையாண்டு தன் தாகத்தைத் தணித்துகொண்டது. அதற்காகக் குளத்தருகில் காத்திருந்த புலியோ ஏமாந்துபோனது.

●

ஆக்சிஜன் கொடுக்க வேண்டியது அரசா ? ஸ்டெர்லைட்டா?

# மூச்சுத் திணறும் இந்தியா

மு.வெற்றிச்செல்வன்



இந்தியாவில் கொரோனா தொற்றின் இரண்டாம் அலை கடுமையான பாதிப்புகளையும் பெரும் மருத்துவ நெருக்கடியினையும் உண்டாக்கியுள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சுகாதாரத்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு ராஜ்யசபாவில் சமர்ப்பித்த அறிக்கையில் ” அனைத்து மருத்துவமனைகளிலும் போதிய ஆக்சிஜன் இருப்பை உறுதி செய்ய போதுமான அளவிற்கு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்” என்று பரிந்துரை செய்திருந்தது.

ஆனால், அதையெல்லாம் கண்டு கொள்ளாத பா.ஜ.க அரசு கொரோனாவை வென்று விட்டதாக தெரிவித்து வந்தது. அதோடு நில்லாமல் மேற்கு வங்க மாநிலத்தில் பெரிய பெரிய தேர்தல் பிரச்சாரங்களை நடத்தியது. இதன் விளைவாக டெல்லி, உத்தரபிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களில் மருத்துவ சிகிச்சைக்கு படுக்கைகள் இல்லாமலும் படுக்கைகள் கிடைத்தாலும் ஆக்சிஜன் கிடைக்காமல் கொத்துக் கொத்தாக பொதுமக்கள் கொரோனா பாதிக்கப்பட்டு இறந்தனர். கொடுமை என்னவெனில் சிகிச்சைக்காக காத்திருந்து இறந்தவர்கள் சுடுகாட்டிலும் எரியூட்டப்படுவதற்காக 20 முதல் 30 மணிநேரம் வரைக்கும் பிணமாக காத்திருந்தனர்.

சில தினங்களுக்கு முன்பாக போதிய மருத்துவ வசதி கிடைக்காமல் கோவிட்19 தொற்றால் இறந்து போகும் ஒவ்வொரு உயிருக்கும் பொறுப்பேற்க வேண்டியது அரசுத்தான் என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் கோவிட் கட்டுப்பாடு தொடர்பான வழக்கு ஒன்றில் கூறியிருந்தது. மேலும், ஓராண்டு கால அனுபவமும் படிப்பினையும் பெற்ற பின்பும் அரசின் இந்த செயலற்ற தன்மை வேதனைக்குரியது என்றும் கூறியிருந்தது. இதுபோல மக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளையும் ஆக்சிஜன் மற்றும் பிற மருந்துகள் கொடுக்கத் தவறிய அரசுகளை கடுமையாக சாடியது டெல்லி உயர்நீதிமன்றம், மும்பை உயர்நீதிமன்றமும் மஹாராஷ்டிரா

மாநிலத்திற்கு தேவையான ஆக்சிஜனை கொடுக்க மறுத்த ஒன்றிய அரசை சாடியுள்ளது. அதுபோலவே, கடந்த ஓராண்டாக கோவிட் தொற்றை சமாளிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்று வினா எழுப்பியது சென்னை உயர்நீதிமன்றம்.

இப்படி பரவலாக பல உயர்நீதிமன்றங்கள் அரசின் செயலற்ற தன்மையை கேள்வியெழுப்பி வருகிறது. ஆனால், உச்சநீதிமன்றம் ஒன்றிய அரசை நோக்கி கேள்விகளை எழுப்பாமல் ஸ்டெர்லைட் மூலமாக ஆக்சிஜன் உற்பத்தி செய்வதில் என்ன பிரச்சனை என தமிழ்நாடுஅரசைக் கேட்டது. மேலும் ஸ்டெர்லைட் ஆலை இயங்குவதற்கான அனுமதியினையும் அளித்துள்ளது. மக்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி அன்றைய எதிர்கட்சிகளின் சம்மதத்தோடு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது அதாவது நாட்டில் நிலவும் ஆக்சிஜன் தட்டுப்பாட்டை ஸ்டெர்லைட் மூலமாக மட்டுமே தீர்க்க முடியும் எனும் பிம்பம் கட்டமைக்கப்பட்டதன் மூலம் இந்த அனுமதியை பெற்றுள்ளது வேதாந்தா நிறுவனம்.

ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கான தமிழ் நாடு அரசின் உத்தரவு செல்லும் என சென்னை உயர்நீதிமன்றம் கடந்த ஆண்டு தீர்ப்பளித்திருந்தது. இத்தீர்ப்பிற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தது. அத்தோடு இறுதித் தீர்ப்பு வரும் வரையில் ஆலையை பராமரிப்பதற்கான அனுமதியினையும் கோரியிருந்தது. அந்த மனு அப்போதே உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப் பட்டது. தற்போது நாட்டில் நிலவும் ஆக்சிஜன் பற்றாக்குறையை பயன்படுத்திக் கொண்டு மீண்டும் ஆலையை பராமரிப்பதற்கான அனுமதிகோரி 16/04/2021 அன்று புதிய மனு ஒன்றை தாக்கல் செய்தது. மேலும் அம்மனுவில் நாளொன்றிற்கு 1050 டன் அளவிலான ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் ஆலை தங்கள் வசம் உள்ளது என்றும் அதனை செயல்படுத்த அனுமதித்தால் மக்களுக்கு இலவசமாக வழங்க தயார் எனவும் கூறியிருந்தது. இந்த மனு மீதான விசாரணை அன்றைய உச்ச நீதிமன்ற தலைமை நீடிபதி போப்டே முன்பாக விசாரனைக்கு வந்தபோது நாட்டில் நிலவும் ஆக்சிஜன் தட்டுப்பாடை கருத்தில் கொண்டு ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்தி செய்ய ஏன் அனுமதிக்கக் கூடாதென கேள்வி எழுப்பினார், இதுகுறித்தான பதில் மனுவை தாக்கல் செய்ய தமிழ்நாடு அரசிற்கு வாய்ப்பளித்து வழக்கை ஒத்தி வைத்திருந்தார்.

இந்த விசாரணைக்கு பின்பு ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த மக்கள் குறைந்தபட்சம் அரசாங்கமே ஆலையை கைப்பற்றி ஆக்சிஜன் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கூறினர். இப்படி ஒரு நிலைமை வந்துவிடக் கூடாதென நினைத்த வேதாந்தா நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் கூடுதல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. அதில், ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்தியை மேற்கொள்ள தமிழ்நாடு அரசிற்கு நிபுணத்துவம் இல்லை என்றும் அப்படி அரசு கையகப்படுத்தி தயாரிக்கும் ஆக்சிஜன் போதிய தரத்துடன் இருக்காது எனவும் தெரிவித்திருந்தது. இதற்கு எதிராக தமிழ் நாடு அரசு எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையே அன்றைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் கூட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் வேதாந்தா நிறுவனத்தை ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்திக்காக மட்டும் அனுமதிக்கலாம் என்று முடிவானது. இந்த அனுமதி நான்கு மாதத்திற்கு மட்டும் வழங்கலாம் என்றும் ஆக்சிஜன் உற்பத்தியை கண்காணிக்க அரசு அதிகாரிகள், நிபுணர்கள், பொதுமக்கள் அடங்கிய குழுவை அமைப்பது என்றும் முடிவானது. இந்தக் கூட்டத்தில் ஸ்டெர்லைட் ஆலையை அரசே கையகப்படுத்தி ஆக்சிஜன் உற்பத்தியில் ஈடுபடலாம் என்ற மக்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக வழக்கின் மறு விசாரனையின்போது தமிழ் நாடு அரசு தனது பதிலுரையை தாக்கல் செய்தது. இவற்றையெல்லாம் பரிசீலனை செய்த உச்சநீதிமன்றம் ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்தி செய்வதற்கான அனுமதியை வழங்கியது. மேலும், ஆக்சிஜன் உற்பத்தியைக் கண்காணிக்க குழு அமைக்கவும் உத்தரவிட்டது. ஆனால், தமிழ் நாடு அரசு கூறியுள்ளதுபோல மக்கள் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற மறுத்து விட்டது உச்சநீதிமன்றம், மேலும் உடனடியாக ஸ்டெர்லைட் ஆலை இயங்குவதற்கான அனுமதியை தமிழ் நாடு

அரசு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. இந்த தொடர் நிகழ்வுகளில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது நாட்டில் தற்போது நிலவும் ஆக்சிஜன் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய ஸ்டெர்லைட் ஆலையால் முடியாது என்பதே. ஸ்டெர்லைட் ஆலையில் நாளொன்றிற்கு 1050 டன் ஆக்சிஜன் உற்பத்தி செய்வதற்கான திறன் இருந்தபோதிலும் அதில் மருத்துவ ஆக்சிஜன் நாளொன்றுக்கு 20 டன் அளவிலே கிடைக்கும். மேலும் இந்த உற்பத்தியை துவங்கி மக்களிடம் சேர்ப்பதற்கு குறைந்தபட்சம் ஒன்பது மாதங்கள் ஆகலாம் எனவும் உச்சநீதிமன்றம் முன்பாக கூறப்பட்டுள்ளது. எனவே ஸ்டெர்லைட் ஆலை மூலமாக கிடைக்கப் பெறும் ஆக்சிஜன் மூலம் நாட்டு மக்கள் காப்பாற்றப்படுவர் என்று நினைப்பது பகல் கனவே.

மேலும் இந்த வழக்கின் விசாரணையின்போது தமிழ்நாடு அரசிற்கு தேவையான ஆக்சிஜன் கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையும் வைக்கப் பட்டது. இந்தக் கோரிக்கையை உச்சநீதிமன்றம் நிராகரித்து விட்டது. நாட்டில் உள்ள அனைத்து ஆக்சிஜன் உற்பத்தி நிலையங்களையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஒன்றிய அரசிடமே தற்போது உள்ளது, அதன்படி ஒன்றிய அரசுதான் ஆக்சிஜன் இருப்பை பகிர்ந்தளிப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிக்க முடியுமென உச்ச நீதிமன்றம் கூறிவிட்டது. ஆனால், நாட்டில் தற்போது நிலவும் கொடுமையான ஆக்சிஜன் பற்றாக்குறை நிலை குறித்து எவ்வித கேள்வியையும் எழுப்ப தவறிவிட்டது உச்சநீதிமன்றம்.

குறிப்பாக PM Cares நிதியின் மூலமாக கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நாடெங்கும் 162 இடங்களில் ஆக்சிஜன் உற்பத்தி மையங்கள் அமைப்பதற்கான டெண்டர் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் 3 நிறுவனங்களுக்கு அத்தைகைய நிலையங்களை அமைக்க அனுமதியும் வழங்கப்பட்டது. குறிப்பாக உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா, டெல்லி, குஜராத் போன்ற மாநிலங்களில் இந்த நிலையங்களை அமைப்பதற்காக உத்தரவுகள் வழங்கப்பட்டன. சுமார் 200 கோடி ரூபாய் அளவில் நிதியும் ஒதுக்கப்பட்டது. ஆனால், இந்த திட்டத்தின்படி தற்போது 32 ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகள் மட்டுமே நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் 16 ஆலைகள் மட்டுமே செயல்படும் நிலையில் உள்ளன. இந்தத் திட்டப்படி அனைத்து




# பூவுலகு

சுற்றுச்சூழலுக்கான மாத இதழ்

ஆசிரியர்
கோ.சுந்தர்ராஜன்

கவுரவ ஆசிரியர்
மருத்துவர் கு.சிவராமன்

**நிர்வாக ஆசிரியர்**
கவிதா முரளிதரன்

**இணை ஆசிரியர்**
வழக்கறிஞர் சுந்தரராஜன்

**ஆசிரியர் குழு**
வழக்கறிஞர் மு.வெற்றிச்செல்வன்
ஜீயோ டாமின்
சதீஷ் லெட்சுமணன்

**மின்மினி ஆசிரியர்**
கோ.ராஜாராம்

**இதழ் வடிவமைப்பு**
மெய்யருள்

**பூவுலகின் நண்பர்கள்**
பழைய எண் 29/2,
புதிய எண் 6/2 12 ஆவது தெரு,
வைகை காலனி, அசோக் பில்லர்,
சென்னை -83

**தொடர்புக்கு**
90949 90900

**இணையம்:** www.poovulagu.org
**வலைப்பூ:** www.poovulagu.net
**ஃபேஸ்புக்:** www.facebook.com/poovulagu
**மின்னஞ்சல்:** info@poovulagu.org (நிர்வாகம்)
editor@poovulagu.org (ஆசிரியர் குழு)

**ஆண்டுச்சந்தா : ரூ.350**
**இரண்டாண்டுச் சந்தா : ரூ.700**

**வங்கிக் கணக்கு**
**POOVULAGIN NANBARGAL,**
KVB Anna nagar,
A/c No: 1154 135 00000 4357,
Ifsc: KVBL 000 1154

அட்டை : நன்றி Reuters

இடங்களிலும் ஆக்சிஜன் உற்பத்தி நிலையங்கள அமைக்கப்பட்டிருந்தால் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கலாம், இதனை ஒன்றிய அரசாங்கள் செய்யத் தவறிவிட்டது. அரசமைப்புச் சட்டத்தின்படி தன் கடமையை செய்யத் தவறியுள்ளது. இதனை டெல்லி உயர் நீதிமன்றமும் சுட்டிக் காட்டியது. ஆனால், உச்ச நீதிமன்றமோ இதுகுறித்த எந்த கேள்வியும் எழுப்பாமல் ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் முன்வைத்த வாதங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்ப்பு கூறியுள்ளது. ஸ்டெர்லைட் நிர்வாகத்திற்கு ஆதரவாக ஒன்றிய அரசின் வழக்கறிஞர் சில கருத்துகள் கூறியதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

தூத்துக்குடி பகுதி மக்கள் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர். மேலும் இந்தத் தீர்ப்பிற்கு எதிராக சில அடையாள போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளனர். ஸ்டெர்லைட் ஆலை உற்பத்தி துவங்கிய 1996ஆம் ஆண்டு முதல் அது மூடப்பட்ட 2018ஆம் ஆண்டு வரை பலவித சட்ட மீறல்களும் சூழல் சீர்கேட்டையும் நிகழ்த்தியுள்ளதே மக்களின் எதிர்ப்பிற்கான காரணம். குறிப்பாக 2013ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் ஸ்டெர்லைட் ஆலை பலவித சட்ட மீறல்கள் செய்துள்ளதாகவும் சூழலை சீர்கெடுத்துள்ளதாலும் இடைக்கால நிவாரணமாக 100 கோடி ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கியது.

மேலும் தேவைப்பட்டால் மாநில, மாவட்ட அதிகாரிகள் ஸ்டெர்லைட் நிர்வாகத்திற்கு எதிராக அபராதம் விதிக்கலாம எனவும் தீர்ப்பு கூறியிருந்தது, இந்த தீர்ப்பிற்கு பின்பாகவும் ஸ்டெர்லைட் நிர்வாகம் தன்னுடைய விதிமீறல் செயல்பாடுகளை நிறுத்தவில்லை. தொடர்ச்சியாக அதிகளவில் ஆர்சனிக் வாயுவை வெளியேற்றி காற்றை மாசுபடுத்துவதும் நிலத்தடி நீரை மாசுபடுத்தும் போன்ற செயல்களை செய்து வந்தது. ஆபத்தான கழிவுகளை முறையாக மேலாண்மை செய்வதற்கான தொட்டிகளை அமைக்காமல் இருந்தது. பிறகழிவுகளை நீர் நிலைகளில் கொட்டி வந்தது. இதுபோன்ற தொடர் விதிமீறல் காரணமாகவும் சூழல் சீர்கேடு காரணமாகவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக தொடர்ச்சியாக பல நோட்டிசுகளை




அனுப்பியது, ஆய்வுகளும் மேற்கொண்டது. இதன் தொடர்ச்சியாகத்தான் ஸ்டெர்லைட் ஆலையின் உற்பத்தியை நிறுவத்துவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. தமிழக அரசும் இந்த ஆணைகளை உறுதி செய்தது. இந்த இரண்டு ஆணைகளையும் சென்ன உயர் நீதிமன்றம் சரியானதே என தீர்ப்பளித்தது.

இப்படி தொடச்சியாக சூழலுக்கெதிராகவும் சமூகத்திற்கெதிராகவும் செயல்பட்டு வந்த ஸ்டெர்லைட் நிர்வாகம் திடீர் புனித அவதாரம் எடுத்திருப்பது சந்தேகத்திற்குரியது. ஆக்சிஜன் உற்பத்தி எனும் போர்வையில் உள்ளே நுழைந்து மீண்டும் ஆலையை நடத்துவதற்கான முயற்சியாகத் தான் இந்த செயல்பாடுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதன் காரணமாகத்தான் மக்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். எனவே விழிப்புடன் இருந்து ஸ்டெர்லைட்டின் திட்டங்களை எதிர் கொள்வதற்கான வேலைகளை மேற்கொள்ள வேண்டியது அனைவரின் கடமையாகும்.

●

# கிரிஜா வைத்தியநாதனுக்கு எதிராக வழக்கு தொடுத்தது ஏன்?

**பூவுலகின் நண்பர்கள்**

2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் நிபுணத்துவ உறுப்பினராக தமிழ் நாடு தலைமைச் செயலாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற கிரிஜா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டார். அவருக்கு தேசிய பசுமைத் தீர்ப்பாயச் சட்டப்படி நிபுணத்துவ உறுப்பினர் ஆவதற்கு போதிய தகுதி இல்லை எனும் அடிப்படையில் பூவுலகின் நண்பர்கள் அமைப்பு சார்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு குறித்தான தகவல்களை விவாதிப்பதற்கு முன்பாக சில அடிப்படை அம்சங்களை புரிந்துகொள்ள தேவையுள்ளது.

அவசர நிலை காலகட்டமான 1976ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு உறுப்புகள் 323A மற்றும் 323B சேர்க்கப்பட்டன. இதன் மூலம் தீர்ப்பாயங்கள் (Tribunals) எனும் புதிய நீதிமன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன. மேலும், இந்த சட்டத்திருத்ததின் மூலம் உயர்நீதிமன்றங்களின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு தீர்ப்பாயங்களுக்கு அவை வழங்கப்பட்டன. இப்படியாக பலவித தீர்ப்பாயங்கள் உருவாக்கப்பட்டு வந்தன. இதன் தொடர்ச்சியாக 2010ஆம் ஆண்டு தேசிய பசுமைத் தீர்ப்பாய சட்டத்தின் மூலம் பசுமைத் தீர்ப்பாயங்கள் உருவாக்கப்பட்டன. இந்த தீர்ப்பாயங்கள் இரண்டு உறுப்பினர்களை நீதிபதிகளாக கொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டன. இந்த பதவிகளுக்கு யாரை நியமிக்கலாம் என்கின்ற சட்ட வரையறைகளையும் இச்சட்டம் வழங்கி யுள்ளது. இரண்டு உறுப்பினர்களில் ஒருவர் நீதித் துறையினையும் மற்றொருவர் நிபுணத்துவ அனுபவங்கள் பெற்ற நபராக இருக்க வேண்டும் என இச்சட்டம் கூறுகிறது.

குறிப்பாக, இந்தச் சட்டத்தின் 5ஆம் பிரிவு 15 ஆண்டு காலம் தொழில்நுட்ப வல்லுனராக இருக்கும் ஒரு நபரை நிபுணத்துவ உறுப் பினராக அமர்த்தலாம் எனக் கூறுகிறது.



மேலும் அவருக்கான கல்வித் தகுதியினையும் இச்சட்டம் நிர்ணயித்துள்து. கூடுதலாக 5 ஆண்டுகள் கள அனுபவம் கொண்ட நபராக அவர் இருக்க வேண்டும் எனக் கூறுகிறது. இதற்கு மாறாக அதே சட்டப்பிரிவு அரசு அதிகாரிகளாக பதினைந்து ஆண்டுகள் அனுபவம் பெற்ற நபர்களை நிபுணத்துவ உறுப்பினராக நியமிக்கலாம் எனக் கூறுகிறது. அந்த 15 ஆண்டு காலத்தில் 5 ஆண்டுகள் சுற்றுச்சூழல் தொடர்புள்ள துறைகளில் பணியாற்றியிருக்க வேண்டும் என்பதையும் கூறியுள்ளது.

இந்த உறுப்பினர்களை பரிசீலனை செய்து நியமிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று இச்சட்டம் கூறுகிறது. அந்தக் குழுவில் பணியிருக்கும் உச்ச நீதிமன்ற நீதிபதி, பசுமைத் தீர்ப்பாயத் தலைவர், மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் செயலாளர், இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குனர் மற்றும் இரண்டு வனம் மற்றும் சுற்றுச்சூழல்

சார்ந்த நிபுணர்கள் இடம்பெற வேண்டும் என 2010ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டம் கூறியது. 2017ஆம் ஆண்டு நாட்டிலுள்ள எல்லா தீர்ப்பாயங்களின் நியமன முறைகளையும் மாற்றியமைக்கும் வகையில் பா.ஜ.க அரசு நிதிச்சட்டத்தின் கீழ் திருத்தங்களை கொண்டு வந்தது. இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன, உச்ச நீதிமன்றம் 2017ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்ப்பாயங்களின் உறுப்பினர்கள் நியமன சட்டத் திருத்தம் செல்லுபடியாகது என தீர்ப்பளித்தது.

அதற்கு பின்பாக 2020ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதிய தீர்ப்பாயங்கள் உறுப்பினர் நியமன சட்டத்தை அறிமுகம் செய்தது பா,ஜ,க அரசு. இந்தச் சட்டத்தின் மூலம் தேசிய பசுமைத் தீர்ப்பாய உறுப்பினர்களை நியமிக்கும் வழிமுறைகளும் மாற்றியமைக்கப்பட்டன. சுற்றுசூழல் மற்றும் வனம் குறித்த நிபுணர்கள் இல்லாத குழுவைக் கொண்டு பசுமைத் தீர்ப்பாய உறுப்பினர்களை நியமிக்கலாம் என்கின்ற அளவில் புதிய சட்டம் மாற்றம் பெற்றது. இந்தப் பின்னணியில்தான் கிரிஜா வைத்தியநாதன் நியமனத்தை நாம் அணுக வேண்டும்.

பூவுலகின் நண்பர்கள், தேசிய பசுமைத் தீர்ப்பாயச் சட்டத்தின்படி கிரிஜா வைத்திய நாதனுக்கு போதிய நிபுணத்துவ அனுபவம் இல்லை என்கின்ற வகையில் வழக்கு தொடுத்தது. குறிப்பாக அவர் 3 ஆண்டுகள் 6 மாதம் மட்டுமே சுற்றுச்சூழல் சார்ந்த துறைகளில் பணியாற்றியுள்ளார் என்பதால் அது போதுமானதல்ல என வாதம் முன் வைக்கப்பட்டது. இதனை சென்னை உயர் நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டு ஏப்ரல் 9ஆம் தேதி அவரின் நியமனத்திற்கு இடைக்காலத் தடை வழங்கியது. அதற்கு பின்பு கிரிஜா வைத்தியநாதன் தரப்பில் அவரது அனுபவம் குறித்து புதிய ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அதில், அவர் சுகாதாரத்துறைச் செயலாளராக இருந்த காலத்தில் மருத்துவக் கழிவுகள் மேலாண்மைக் குழுவின் தலைவராக 2.5 ஆண்டுகள் பணியாற்றியுள்ளதாக கூறியிருந்தார். இதனைக் கருத்தில் கொண்டு கிரிஜா வைத்தியநாதனுக்கு 58 மாத சூழலியல் துறைசார்ந்த அனுபவம் இருக்கிறதென்றும் இந்தப் பொறுப்பிற்கு தேவையான 60 மாத அனுபவத்தில் இரண்டு மாதங்களே குறைவாக உள்ளது என்பதால் அவர் இப்பொறுப்பிற்கு தகுதியற்றவர் என்று கூறுபதற்கில்லை என தீர்ப்பளித்தது. மேலும், அரசு அதிகாரிகளை நிபுணத்துவ உறுப்பினர்களாக நியமிப்பதில் தகுதிக்கான வரையறை மாற்றியமைக்கப்பட தெளிவுபடுத்தப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் கருத்து கூறியது.

இந்த வழக்கின் விசாரணையின்போது 2010ஆம் ஆண்டு சட்டத்தின்படி அமைக்கப்பட வேண்டிய குழு அமைக்கப்படாமல் 2020ஆம் ஆண்டு தீர்ப்பாய உருப்பினர் நியமன சட்டப் படி குழு அமைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இந்தக் குழுவில் சுற்றுச்சூழல் மற்றும் வனம் குறித்த வல்லுனர்கள் இடம்பெறவில்லை. இந்த நியமனத்திற்கான செயல்பாடுகள் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதமே துவங்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் இருந்த சட்டப்படி சுற்றுச்சூழல் நிபுணர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இதனை செய்ய ஒன்றிய அரசு தவறியுள்ளது. இது மிகப் பெரிய சட்ட மீறலாகும். இதனை வழக்காடும்போது நீதிமன்றத்தின் முன்பு சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால், அந்த வாதம் நிராகரிக்கப்பட்டது.இதனடிப்படையில் கிரிஜா வைத்தியநாதனுக்கு போதிய தகுதி இல்லை என்ற வகையிலும் அவரை பரிந்துரைத்த குழு சட்டப்படியாக அமைக்கப்பட்ட குழு இல்லை என்ற வகையிலும் அவரின் நியமனத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இதற்கிடையில் கிரிஜா வைத்தியநாதன் தென் மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் நிபுணத்துவ உறுப்பினராக பொறுப்பேற்க மறுத்துவிட்டதாகச் செய்திகள் வெளியாகி யுள்ளன.

●

Published and printed by G. Sundarrajan on behalf of Poovulagin Nanbargal, Printed at Meera offset Printers, 104 V.R Pillai Street, Triplicane, Chennai 600005. Published from Old No. 29/2, New No 6/2 12th Street, Vaigai Colony, Ashok pillar, Chennai - 600083. Editor G. Sundarrajan

புகைப்படக் கட்டுரை : மனோஜ்குமார்

# பழவேற்காடு

பல்லாண்டு காலமாக பல உயிர்களிற்கு வாழ்வாதாரமாக திகழ்ந்து கொண்டு வருகிறது பெருமைக்குரிய நமது பழவேற்காடு. பல குடிகளின் எழுச்சி மற்றும் வீழ்ச்சிகளை கண்ட இந்த இடம் மனிதர்களுக்கு மட்டும் சொந்தமின்றி பல்வேறு வன உயிர்களுக்கும் சொந்தமான ஓர் இடமாகும். சில்கா ஏரிக்கு பின் இந்தியாவின் இரண்டாவது பெரிய ஏரி என்ற பெருமையை கொண்டாடுகிறது பழவேற்காடு ஏரி. இப்பொழுது நாம் இங்கு பரவலாக காணப்படும் சில வன நண்பர்களை சந்திப்போம்.



நெடுங்கால் உள்ளான் Black-winged Stilt

கருப்பும் வெள்ளையும் நிறமாக கொண்ட இந்த சிறிய பறவைக்கு ஏன் இந்த பெயர் வந்தது என்று இதனுடைய நீண்ட கால்களை கண்டு தெரிந்துகொள்ளலாம். இந்த பறவை தனது நீண்ட கால்களை ஏரி படுக்கைகளில் மெதுவாக நடப்பதற்கு மட்டுமின்றி, உணவைத் தேடுவதற்கும் பயன்படுத்துகிறது. இந்த பறவைகள் அரிதாகவே உணவுக்காக நீந்துகின்றன, மாறாக ஆழமற்ற நீரில் உணவை தேட விரும்புகின்றன



காஸ்பியன் ஆலா Caspian Tern

மீன்களை வேட்டையாட தன் நீண்ட இறக்கைகள் விரித்து பறக்கும் காஸ்பியன் ஆலா. ஆலாக்களிலேயே மிகப் பெரிய இனம் காஸ்பியன் ஆலா வாகும். இந்த பறவையின் முக்கிய உணவு மீன்கள். காஸ்பியன் ஆலாவால் நன்னீர் மற்றும் உப்பு நீர் சூழலில் இயல்பாக வாழமுடியும்.



கொண்டை ஆலா Lesser Crested Tern

இரவு வருமுன் தன்னை சுத்தம் செய்து கொள்ளும் காட்சியை பார்க்கலாம். ஒரு அம்பு அதன் இலக்கைத் துளைப்பது போல, மீன்களை வேட்டையாடுவதற்காக நேரடியாக நீரில் மூழ்கி வேட்டை ஆடும். காதலாடுதல் பொழுது ஆண் பறவை பெண் பறவைக்கு மீன் பிடித்து அதை அன்போடு வழங்கும்.



உள்ளான் Common Sandpiper

இனச்சேர்க்கை சடங்கை பின்பற்றும் ஜோடியை நாம் புகைப் படத்தில் காணலாம். சிறிய உடல் மற்றும் குறுகிய கால்கள் உடைய இந்த பறவைக்கு நீண்ட, நேரான அலகு உண்டு. தரையில் நிறைய நேரம் செலவிடும் இந்த பறவை நடந்து செல்லும் பொழுது அதன் தலை மற்றும் உடலின் பின்புறம் தொடர்ந்து துடித்துக் கொண்டே இருப்பதை காணலாம்.

Poovulagu Tamil Monthly Registered with the Registrar of Newspapers for India Under No. TNTAM/2016/70903



பளாஸ் கடற்பறவை Pallas's gull

கடற்காகப் பறவைகளில் மிக பெரியது பளாஸ் கடற்காகம் ஆகும். காணப்படும் புகைப்படத்தில் பழுப்புத்தலை கடற்பறவையுடன் உயரத்தை ஒப்பிட்டு பார்த்தால் தெரியும்



கிளிஞ்சல் கொத்தி Eurasian Oystercatcher

துல்லியமாக பறக்கும் திறனை காண்பிக்கும் கிளிஞ்சல் கொத்தி வலசைபோகும் பறவைகளில் ஒன்று. பொதுவாக கடற்கரைகள் மற்றும் சேற்றில் காணப்படும் மட்டிகளைச் சாப்பிடும்.



கல்பொறுக்கி உப்புக்கொத்தி Pacific Golden Plover

மாலை நேரத்தை வரவேற்றுக் கொண்டிருக்கும் கல்பொறுக்கி உப்புக்கொத்தி அழகான பறவைகளில் ஒன்றாகும். மேலும் இவை வலசைபோகும் பறவையும் ஆகும்.



பொன்னிறக் குள்ளநரி Golden jackal

நாய்க் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குள்ளநரி இனமான இவை ஓநாய் போன்ற தோற்றத்தில் இருக்கும். இவை பொதுவாக ஆறுகள், ஏரிகள் மற்றும் கடல்கள் ஆகியவற்றின் கரையோரங்களில் காணப்படுகின்றன.



பழுப்புத்தலை கடற்பறவை
Brown-headed Gull

மற்ற பறவைகளிடமிருந்து உணவு திருடுவதை வழக்கமாக கொண்ட பழுப்புத்தலை கடற்காகம், ஒரு தைரியமான பறவையுமாகும். இப்பறவைகள் அதிகமாக ஒலி எழுப்பும் குணம் கொண்டது.